உ

# அருள் ஒளி



103

மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோவில்
பெருந் திருவிழா சிறப்பு மலர்

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, இலங்கை - 2015

உ

துர்க்காதேவி துணை

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் - தெல்லிப்பழை



# புத்தாண்டு வாழ்த்தும் பிரார்த்தனையும்

## மன்மத வருடப்பிறப்பு 14-04-2015 செவ்வாய்க்கிழமை

**பேரன்புடையீர்,**

ஓம் துர்க்கா சரணம்

வணக்கம், துர்க்காதேவியின் திருவருள் துணைநிற்க எதிர்வரும் 14-04-2015 செவ்வாய்க்கிழமை (மன்மத வருடம்) புதுவருடம் பிறக்கிறது. புதிய ஆண்டு அனைவருக்கும் இனிய ஆண்டாக அமைய எல்லாம்வல்ல துர்க்காதேவியைப் பிரார்த்திக்கின்றோம். அம்பாளின் திருவருளால் எங்கள் தேவஸ்தானம் சீரும் சிறப்புடனும் விளங்குவதை அனைவரும் அறிவீர்கள். அம்பாளின் மீளா அடியவர்களின் எல்லையில்லாத பக்தியினால் தெல்லிமா நகரில் வீற்றிருக்கும் துர்க்காதேவியின் திருவருள் பிரகாசித்தவண்ணமாகவுள்ளது.

அன்பும் பண்பும் நிறைந்த அடியார்களே புத்தாண்டு நன்நாளில் நன்றாகப் பிரார்த்திப்போம். எங்கும் நீதியும் நிம்மதியும் நிலைத்திடவும், தர்மங்களைக் காக்கவும் அனைவரும் வேண்டுதல் செய்வோம். அன்பினால் பண்பினால் அறவழியால் அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க ஆவல் கொள்வோம். தாய், தந்தையை, குருவை, மூத்தோரைப் பேணி நல்லாசி பெறுவோம். இவ்வாண்டு உங்கள் இல்லங்களில் மங்களமும், மகிழ்ச்சியும் நிறைவாகக் கிடைக்க மீண்டும் அம்பாளை வணங்கி எமது இனிய நல் வாழ்த்துக்களைச் சமர்ப்பித்துக் கொள்கிறோம்.

வணக்கம்.

*நிர்வாக சபை,*
*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,*
*தெல்லிப்பழை.*

**ஆறு. திருமுருகன்**
*தலைவர்*

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.



உ

# அருள் ஒளி

## (மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்
கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்
உதவி ஆசிரியர்
சைவத்திரு. கா. சிவபாலன் அவர்கள்

பங்குனி மாத மலர்
2015

வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை.

பதிவு இல. : ISSN 2362 - 0587
ISBN 978 - 955 - 23 - 0019 - 3

e-mail : thurkaiammantemple@gmail.com
Face book: tellidurga@gmail.com

## யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இந்து சமய தத்துவ பீடம் விரைவில் உருவாக வேண்டும்

ஈழத் திருநாட்டில் உருவான பல்கலைக்கழகங்களில் சைவ மக்களின் பெருஞ்சொத்துக்களை காணிக்கையாக்கி உருவானதே யாழ். பல்கலைக்கழகம் சைவ சமயத்தவர்களின் முழுமுதற்கடவுளாகிய சிவபெருமானின் பெயரில் சேர். பொன். இராமநாதன் அவர்கள் 1916ஆம் ஆண்டு திருநெல்வேலியில் பரமேஸ்வராக் கல்லூரியை கட்டுவித்தார். இக்கல்லூரியின் சொத்துக்களை அடிப்படையாகக் கொண்டு 1974இல் யாழ். பல்கலைக்கழகம் திறந்து வைக்கப்பட்டது. இப்பல்கலைக்கழம் திறப்பதற்கு முன்பு இலங்கையில் பௌத்தர்களுக்கான பிரிவெனா பல்கலைக்கழகம் உட்பட சில பல்கலைக்கழகங்கள் செயற்பட்டு வந்தன.

யாழ். பல்கலைக்கழகம் திறக்கப்பட்ட நாள் முதல் இந்து சமய கல்விக்கான பீடம் உருவாக்கப்பட்டு இந்துக்களின் வரலாறு பண்பாடு தத்துவம் தொடர்பான பரந்த ஆராய்ச்சி இடம்பெறவேண்டுமென பலரும் குரல் கொடுத்தனர். எனினும் இதுவரை பயன் கிட்டவில்லை. தற்பொழுது இலங்கையில் 15இற்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்கள் அரச பல்கலைக்கழகங்களாக இயங்கி வருகின்றன. இதைவிட தனியார் பல்கலைக்கழகங்களும் வேகமாக உருவாகி வருகின்றன. கிழக்கு

இலங்கையில் இரு பல்கலைக் கழகங்கள் இயங்குகின்றன. அங்கு பல்கலைக் கழகத்தில் இஸ்லாமிய பீடம் உருவாக்கப்பட்டுவிட்டது. ஆனால் வெள்ளிவிழாக் கண்ட யாழ் பல்கலைக்கழகத்தில் இந்துப்பீடம் இன்றும் உருவாகவில்லை. இதற்கான முயற்சிகள் விரைவில் எடுக்கப்பட வேண்டும். இவ்விடயம் தொடர்பாக பலர் ஆவலோடு காத்திருக்கிறார்கள்.

பல மேடைகளில் இந்துப் பீடத்தின் அவசியம் பற்றி சான்றோர் பெருமக்கள் எடுத்துரைத்து வருகிறார்கள். இந்தியாவில் உள்ள வாரணாசி இந்துப் பல்கலைக்கழகத்தில் பல மேலைத்தேயத்தவர்கள் கற்று வருவதும் ஆய்வுகளை செய்வதும் அனைத்துலகமும் அறிந்ததே. அமெரிக்க பல்கலைக்கழகம் ஒன்றில் இந்துப்பீடம் உருவாக்கப்பட்டு இந்து மெய்யியல் ஆராய்ச்சியும் யோக கற்கைநெறியும் சிறப்புப் பெற்று வருவதை கல்வியாளர்கள் அறிவர். சமீபத்தில் சிவத்தமிழ்ச் செல்வி அம்மையாரின் சைவத்தமிழ் பற்றிய ஆய்வு நூல் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் வெளியிடப்பட்டது. அகில இலங்கை இந்துமாமன்றத்தின் வைரவிழா அங்கமாக இந்நூல் வெளியிடப்பட்டது. இவ்விழாவில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் அகில இலங்கை இந்துமா மன்றத் தலைவர் மற்றும் கற்றோர் முன்னிலையில் கிழக்கிலங்கை கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு. சீ.யோகேஸ்வரன் யாழ். பல்கலைக்கழகத்தில் ஏன் இதுவரை இந்துப்பீடம் அமைக்கவில்லை என்ற கேள்வியை எழுப்பி தன் வேண்டுதலை முன்வைத்தார். நீண்டகாலமாக பலரால் முன்வைக்கப்பட்ட இச்சிந்தனை விரைவில் நிறைவேற்றப்படவேண்டும்.

யாழ். பல்கலைக்கழகம் இப்பீடத்தை அமைப்பதற்கான திட்டத்தை இத்துறை சார்ந்த அறிஞர்களின் ஒத்துழைப்போடு விரைவில் நிறைவேற்ற வேண்டும். இப்பணியைத் தாமதிப்பதனால் எதிர்காலச் சமூகம் மிகவும் பாதிக்கப்படும் என்பதில் ஐயமில்லை. சரியானதை சரியான நேரம் செய்யாது விட்டு பிறரைக் குற்றம் சொல்லுவதில் எப்பயனும் இல்லை.

- ஆசிரியர்

# இன்னல் களையும் இனிய திருமுறைகள்

**செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன்**

சைவ சமயத்தவர்களின் பெருஞ்சொத்தாக விளங்குவது திருமுறைகள். இத்திருமுறைகளை நாவில் உச்சரித்து அனைவரும் நல்ல வண்ணம் வாழலாம். 6ம், 7ம் நூற்றாண்டில் பாடப்பட்ட திருமுறைகள் அருமருந்தானவை ஏக காலத்திற்கும் பொருத்தமானவை. மனித வாழ்வில் நாம் சந்திக்கும் இன்ப துன்பங்களைக் கடந்து இறையின்பத்தை அனுபவிப்பதற்கு நாம் திருமுறைகளைப் பாதுகாக்க வேண்டும். சோதிடர்களை நாடி எங்கள் துன்பம் போவதற்கு என்ன நேர்த்திகள் செய்யலாம் என கேட்போர் அதிகம். பல சோதிடர்கள் சில நேர்த்திகளுக்கான வழிமுறைகளைச் சொல்லி விடுவார்கள். எலுமிச்சைக் கோதில் விளக்கு ஏற்றுதல், நெய் விளக்கேற்றுதல், விரதம் பிடித்தல் எனப் பல மார்க்கங்களைச் சோதிடர்கள் சொல்கிறார்கள். எந்த இடையூறுகளையும் தீர்க்கவல்ல திருமுறைகளைப் படித்து கடவுளை மன்றாடு எனச் சொல்லும் நெறியினை எவரும் பின்பற்றுவதாக இல்லை. இந் நிலை மாறவேண்டும். அன்பினால் ஆண்டவனை மன்றாடும் நெறிமுறையினை எம் சமூகம் உணர வேண்டும். அந் நெறிமுறையின் மார்க்கமாக திருமுறைகள் விளங்குகின்றன.

உள்ளத்தினால் இறைவனை அடையும் உயர்ந்த மார்க்கத்தை திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் பாடிய முதலாவது தேவாரமே அழகாக விளங்குகிறது. இத் தேவாரம் ஞானக் குழந்தையின் ஒலி கேட்டு இறைவன் தாயாகிய உமையோடு காட்சியளித்து அருள்பாலித்த செய்தியை அழகாகக் கூறுகிறது.

**தோடுடையசெவி யன்விடை யேறியோர் தூவெண் மதிசூடிக்**
**காடுடையசுட லைப்பொடி பூசியென் னுள்ளங்கவர்கள்வன்**
**ஏடுடையமல ரான்முனை நாட்பணி தேத்தவருள் செய்த**
**பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.**

இறைவனால் மண்ணுலகை ஆற்றுப்படுத்துவதற்காக அனுப்பப்பட்டவரே "ஞானசம்பந்தர்". தோணிபுரத்துப் படிக்கட்டில் நீரில் மறைந்து அனுட்டானம் பார்த்த தந்தையைக் காணாது பாலகன் அழுத ஓசை பரம்பொருளுக்கும் பார்வதிக்கும் கிட்டியது. அழுத குழந்தையை ஆறுதல் செய்வதற்காக வந்த இறைவன் நல்லருள் பாலித்தார். மூன்று வயதுக் குழந்தைக்கு முன் இறைவன் காட்சி கொடுத்தமையால் யாரும் பெறாத இன்பம் பெறும் பேறு இக் குழந்தை பெற்றது. அழுகை ஓய்ந்தது. அருட்பாலை வழங்கிய இறை காட்சியும் அவ்விடம் மறைந்தது. பாலகனின் வாயில் பால் வடியும் காட்சி கண்டு சிவபாதவிருதயார் ஆகிய தந்தையார் சீற்றம் கொண்டார். யார் உனக்கு பால் தந்தது? என்ற கேள்விக்கு பச்சிளம்பாலன் சொன்ன பதிலே முதலாவது தேவாரம் ஆயிற்று. தந்தையைக் காணவில்லை என்று பயந்தழுத சிறுவன்

முன் எல்லாப் பிறவிகளிலும் வரும் அச்சத்தைப் போக்குகின்ற இறையருளைப் பெற்றதனால் அச்சம் மறைந்து அருள் ஞானம் பேசியது.

மூன்று வயதுக் குழந்தை முதற் தேவாரத்திலேயே இறைவனைக் கள்வன் என்று விழிப்பதை நாம் உணரலாம். அன்பினால் தன்னை வணங்கும் அடியவர்களின் உள்ளத்தைக் கவர்கின்ற கள்வனாக இறைவனை அழகாக எடுத்துரைத்தார். "உள்ளம் கவர் கள்வன்" கடவுளை அடைவதற்கு புறக் கிரியைகளுக்கு அப்பால் அகத்தில் அன்பினை வளர்ப்பதே சாலப் பொருத்தமானது என்பதை சம்பந்தர் பெருமான் சுட்டிக் காட்டினார். இறைவன் எளிமையானவன். அவன் அடியவர்களிடம் பொன், பொருள் கேட்பதில்லை. அதனை விளக்கவே அற்புதமான செய்தி ஒன்றை சம்பந்தர் பெருமான் ஞாபகமூட்டினார். சுடுகாட்டில் விளைந்த சாம்பற்பொடியை உடல் முழுதும் பூசி வந்து என் உள்ளத்தைக் கவர்ந்த கள்வன் என விளக்குகின்றார். இறைவன் எளிமையானவன் என்பதற்கு அப்பால் மண்ணில் பிறந்தவர்கள் அனைவரும் நிறைவில் மண்ணோடு மண்ணாக சாம்பலோடு சாம்பலாக அற்றுப்போவது இயற்கை.

மனிதன் தரும் உபகாரங்களுக்கு அப்பால் எரிந்த சாம்பல் மேலானது என்ற ஞானக்கருத்தும் இங்கே வெளிப்படுத்தப்படுகிறது. படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்ற ஐந்தொழிலுக்கும் காரணமாக விளங்கும் இறைவன், பார்வதி தேவியோடு வந்து என் தாகம் தீர்த்தனர் எனத் தான் பெற்ற பேற்றினை அழகுச் சொல்லாலும் அறிவுச் சொல்லாலும் ஞானக்குழந்தை எடுத்துரைத்தார். "பெம்மான் இவனன்றே" எனக் கூறும் சொல் இறைவன் பெரிய மனம் படைத்தவன் என விளக்குவதாகும். எனவே நாம் அன்பினால் அழைத்து அவன் அருளினைப் பெற்று உய்வதற்கு இத் திருமுறை சான்றாக உள்ளது. இனிய வார்த்தை களினால் இறைவனை மன்றாடுவதற்கு திருமுறைகளைப் பயன்படுத்துவோம். திருமுறைகளுக்கு நிகராக வேறொன்றும் இல்லை. அல்லல் வரும் போதெல்லாம் அருமருந்தான திருமுறைகளைப் பாடி ஆனந்தம் அடைவோமாக.


## சிவபூமி கண்தான சபை

தானங்களில் சிறந்த தானமாக கண் தானத்தைச் செய்ய முன் வாருங்கள். உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்றிருக்கும் ஒருவருக்கு ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே இப்புண்ணிய காரியத்திற்கு ஒப்புதல் தாருங்கள்.

### தொடர்புகளுக்கு

**கலாநிதி ஆறு. திருமுருகன்**
**021 - 222 6550**

கண் வைத்திய நிபுணர்
**Dr. ச. குகதாசன்**
**021 - 222 3645**

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

# தவத்திரு யோகசுவாமிகளின் 51வது குருபூசை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெற்றபோது...









# விக்ரோறியாக் கல்லூரி அதிபர் சைவப் பெரியார் சிவபாதசுந்தரம்

அமரர் பொ. கனகசபாபதி
(முன்னாள் அதிபர்,
தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி)

நான் பிறக்கும் போதே அவர் அதிபர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டார். பதவியில் இருந்து ஓய்வுபெற்ற சில வருடங்களில் அவர் (1930) அமைதியான தியான வாழ்க்கையை மேற்கொள்ளும் பொருட்டு கந்தவனம் ஆலயத்தின் அரு காமையிலே ஒரு குடிலை அமைத்து அங்கே வாழ்ந்து வந்துள்ளார். அவர் காலமாகும் போது நான் பட்டப்படிப்பினைக் கூட முடிக்கவில்லை. ஆகவே அவரைக் கண்டதுமில்லை, அவர் உரைகளைக் கேட்டதும் இல்லை. அவரது ஆக்கங்களைக் கூட வாசித்ததுமில்லை. அவர் பற்றிப் பெரிதாக ஒன்றினையும் தெரிந்திருக்க வில்லை. ஆசிரியப் பணியினை நான் மேற்கொண்ட பின்னர் சைவப் பெரியார் சிவபாதசுந்தரனார் பற்றி நிறையவே கேள்விப்பட்டது மாத்திரம் தான் உண்மை. அவர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் அதிபராக இருந்தவர் என்பது எனக்குத் தெரிய வந்தது. சைவசமய விவகாரங்களில் ஞானமுடையவர் என்பதை மற்றையோர் அவர் பற்றிப் பேசுகின்ற பொழுது காட்டும் பணிவு, பௌவியத்தில் இருந்து அறிய முடிந்தது. எல்லாவற்றினுக்கும் மேலாக இளைஞர் காங்கிரஸ் இக்கட்டான ஒரு நிலையில் இருந்த போது அது கிறிஸ் தவர்கள் ஆதிக்கம் நிறைய உள்ள அமைப்பு என வீண்கதை பரவிய பொழுது அதன் தலைமையை ஏற்று அத்தகைய அபத்தப் பேச்சுக்களுக்கு முற்றுப் புள்ளியிட்டவர் என்பதை அறிந்ததும் அவர் மேல் ஒரு பற்றுதல் ஏற்பட்டது. எனது பெருமதிப்புக் குரிய அதிபர் ஒறேற்றரது கட்டுரை ஒன்றினை வாசித்த பொழுது அவர் பற்றிச் சிறிது அறிய முடிந்தது. யாழ். பல்கலைக் கழகத்திலே தமிழத்துறைத் தலைவராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள தமிழறிஞர் கலாநிதி. நா. சுப்பிரமணியன் அவர்கள் தனது "ஆய்வுகள், பார்வைகள், பதிவுகள்" தொகுதி 2இல் சைவப் பெரியார் அவர்கள் பற்றி எழுதியிருந்த சிறு கட்டுரை ஒன்றினையும் அண்மையில் வாசித்தேன். "தனிமனிதன் தன்னைச் சூழவுள்ள சமு தாயத்தின் பண்பாட்டு வளர்ச்சிக்குத் தனது அறிவையும் ஆற்றலையும் அர்ப்பணித்து வரலாற்றினை முன்னெடுத்துச் செல்வா னாகில் அதற்குப் பிரதிபலனாகச் சமுதாயம் அவனை வரலாற்று மனிதனாக்கி மதிப் பளிக்கின்றது. ஈழத்தின் சைவப் பண் பாட்டின் வரலாற்றிலே இருபதாம் நூற் றாண்டின் முற்பாதியிலே திகழ்ந்த வரலாற்று மனிதர்களிற் குறிப்பிடத்தக்க முதன்மை வாய்ந்தவர் "சைவப் பெரியார்" என்று சிறப்புப் பெயரிட்டு அழைக்கப்படு பவரான புலோலியூர் சு.சிவபாதசுந்தரம் அவர்களாவர். 19ஆம் நூற்றாண்டில் சைவப் பண்பாட்டுக் காவலராகத் திகழ்ந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தொடங்கி வைத்த சமயப் பணியினை எமது காலம் வரை தொடர்ந்து வளர்த்து வந்த நாவலர் ஞான பரம்பரையினரில் முதல் வரிசையில் வைத்து எண்ணப்படும் சிறப்பு வாய்ந்தவர் சைவப் பெரியார்".

"புலமை சான்று சைவப் பரம்பரையில் தோன்றி கலைப்பட்டதாரியாக மலர்ந்து, ஆசிரியப் பணியில் புகுந்து சமய தத்துவ விரிவுரையாளராகவும் நூலாசிரிய ராகவும் வளர்ந்து, சைவம் வளர்க்கும் தனிமனித நிறுவனமாகத் திகழ்ந்தது, சைவ வர லாற்றிலே தன் பெயரை நிறுவிச் சென்ற 'சைவப் பெரியார்' அவர்களின் சாதனை களை அவர் வாழ்ந்த (1878–1953) முக்கால் நூற்றாண்டுக் காலச் சைவ வரலாற்றுப் பகைப்புலத்திற் பொருத்தி நோக்கி மதிப்பிட வேண்டியது வரலாற்றுத் தேவை யாகவே அமைகிறது" என்கிறார்கள் பேராசிரியர் சுப்பிரமணியன் அவர்கள். அத்தகைய ஒரு மதிப்பீட்டினைச் செய்வ தற்குரிய அறிவு எனக்கில்லாமை வருத் தத்துக்குரியதே. ஆனாலும் சைவப் பெரியார் அவர்களது கல்வித்துறை சார்ந்த பங் களிப்பினை இக்கட்டுரை மூலம் முன்னிலைப் படுத்தலாம் என்பதே எனது ஆவல்.

பருத்தித்துறையில் உள்ள புலோலி எனும் சிற்றூரில் வாழ்ந்த தமிழ்ச் சைவப் பாரம்பரியம் மிக்க தலைமுறையினைச் சேர்ந்த சுப்பிரமணியம்பிள்ளை வள்ளி யம்மை தம்பதிகளின் தவப்புதல்வராக சிவபாதசுந்தரம் 1878ஆம் ஆண்டினில் பிறந்தார். சிறு வயது முதலே சிவபாத சுந்தரம் தனது மாமியார் பார்பதிப்பிள்ளை அவர்களின் அரவணைப்பில் தமிழும் சைவமும் கற்றுத் தேறினார். புலோலியில் உள்ள ஆங்கிலப் பாடசாலையில் தனது ஆரம்ப இரண்டாம் நிலைக் கல்வியை சிவபாதசுந்தரம் முடித்துக் கொண்டார். இளம் வயதிலேயே தமிழ் கற்பதில் பெரும் ஆர்வம் கொண்டிருந்தமையாலும், பெற் றோர்களின் உந்துதலாலும் தமிழினையும், சைவத்தையும் கற்றுத் தேறவேண்டும் என்ற பேரவாவின் காரணமாக சுன்னாகம் அ.குமாரசாமிப்புலவரிடம் குருகுலவாசம் செய்து தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்தார். மேற் படிப்புக்காக இந்தியா செல்வதற்கு விரும்பிய சிவபாதசுந்தரனார் தேர்ந் தெடுத்தது திருவனந்தபுரம் மகாராசாக் கல்லூரியாகும். அங்கே அவரது சிறிய தந்தையாரான பேராசிரியர் வ.கணபதிப் பிள்ளை அவர்கள் பணியாற்றிக் கொண்டி ருந்தார். சிறிய தந்தையாரின் வழிகாட்டலில் அங்கே தனது Intermediate பரீட்சையில் சித்தியடைந்ததும் பட்டப் படிப்பிற்காக திருச்சியில் உள்ள அர்ச். சூசையப்பர் கல்லூரியில் சேர்ந்தார். கத்தோலிக்க ஜேசு (Jesuits) சபையினரால் நடத்தப்பட்ட இக்கல்லூரி கட்டுப்பாடுகளில் மிகக் கறா ரானதாக இருந்தது. சிவபாதசுந்தரம் அவர்கள் அதிபராக ஒழுக்கம் கட்டுப்பாட் டிற்கு மிக முக்கியத்துவம் கொடுத்தமைக்கு இக்கல்லூரியில் பெற்ற பயிற்சியும் காரண மாயிருந்திருக்கலாம். இக்கல்லூரியில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களைப் பிரதான பாடங்களாகக் கற்ற சிவபாத சுந்தரம் 1898ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழக B.A. பட்டதாரியானார். ஊர் திரும்பிய சிவபாதசுந்தரம் சிறிது காலம் ஊரிலே உள்ள சிறு பாடசாலைகளில் கற்பித்த பின்னர் திருகோணமலையில் உள்ள அர்ச். சூசையப்பர் கல்லூரியில் அதிபராக இரு ஆண்டுகள் கடமையாற்றி யுள்ளார். சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் நிறுவனர் கனகரத்தின முதலியாரின் மறைவுக்குப் பின்னர் அவரது மகனான திரு.செல்லப்பா அவர்கள் 1902ஆம் ஆண்டில் கல்லூரியின் முகாமை யாளரானார். பாடசாலையை வளர்த்து அதனை ஒரு உன்னதமான கல்விக்

கூடமாகச் செய்யவேண்டும் என்பதில் திரு.செல்லப்பா அவர்கள் பெரு முயற்சி எடுத்தார்கள். அவரது அனுசரணையால் கல்லூரி வளர்ந்தது. இதனால் மக்கள் பேச்சுவாக்கில் அக்கல்லூரியை செல்லப்பா பாடசாலை என்னும் அளவினுக்கு சிறப்புப் பெற்றிருந்தார். திறமையான ஆசிரியர் களைத் தேடி அழைத்து ஆசிரியர் பணிக்கு செல்லப்பா அமர்த்தினார். இந்த முயற்சிக்கு முத்தாய்ப்பாய் அமைந்தது திருகோண மலையில் அதிபராக இருந்த சைவப் பெரியாருக்கு உப அதிபர் பதவி வழங்கி சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கு அழைத்து வந்ததே.

நாவலர் வழியில் சேர். பொன். இராமநாதன் சைவத்துக்குத் தொண்டாற்று வதனைப் பெருமளவில் மதித்த சிவபாத சுந்தரனார் சேர். பொன்.இராமநாதன் அவர்கள் கொழும்பு கொச்சிக்கடைப் பகுதியில் நிறுவிய பொன்னம்பலம் பள்ளிக்குத் தலைமை ஆசிரியர் பதவியை ஏற்குமாறு விடுத்த வேண்டுகோளினை ஏற்று அங்கு சென்று அப்பாடசாலையை நிர்வகித்தார். பெரியாருக்கும் இராம நாதன் அவர்களுக்கும் இக்காலகட்டத்தில் மிக நெருங்கிய தொடர்பு ஏற்பட வாய்ப்பு உண்டானது. 'யாழ்ப்பாணத்துச் சைவப் பிள்ளைகள் கற்பதற்கு அங்கே உள்ள சைவப் பள்ளிகள் போதாது. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி போன்ற சிறந்த ஒரு சைவப் பாடசாலையை நீங்கள் ஆரம்பிக்க வேண்டும் என்ற கருத்தினை சேர். பொன்.இராமநாதன் அவர்களுக்குப் பெரியார் அவர்கள் வலியுறுத்தி அவரை இசையவைத்ததன் விளைவே பரமேஸ்வராக் கல்லூரி யாழ்ப்பாணத்தில் எழுந்தது. 1910ஆம் ஆண்டினிலே மானிப்பாய் மக்களின் முயற்சியால் எழுந்த மானிப்பாய் இந்துக் கல்லூரி வேகமாக வளர்ந்தது. அதன் முகாமையாளராக விளங்கியவர் திரு.திரு விளங்கம். இவர் சைவசித்தாந்தத்தில் அறிவுசால் வல்லவராகக் கருதப்பட்டார். திரு.திருவிளங்கம் அவர்கள் கொழும்பில் இருந்த சைவப் பெரியாரை மானிப்பாய் இந்துக் கல்லூரியின் ஆசிரியர் குழாத்தில் சேர்த்துழைக்குமாறு அழைத்தார். அவரது வேண்டுதலுக்கு இணங்கிய சைவப் பெரி யார் அவர்கள் 1920ஆம் ஆண்டில் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் ஆசிரியர் குழாத்தினில் தன்னை இணைத்துக் கொண்டார். ஏறக்குறைய அதே சமய காலத்தில் தான் திரு. மயில்வாகனன் (விபுலானந்த அடிகள்) மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபராகவும் பொறுப் பேற்றார். இருவருமே மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நிலைத்து நிற்கவில்லை. ஆனால் இருவரும் தம்மால் இயன்ற அளவி னுக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பெயரினைக் காப்பாற்றக் கடினமாக உழைத்தனர். பாடசாலையின் கணித விஞ்ஞானத்துறை வளர்ச்சியில் இருவரதும் பங்களிப்பு பெருமடங்காகவிருந்துள்ளது. பாடசாலைக்கென ஒரு இலச்சினையை உருவாக்குவதிலும் இருவரும் கூட்டாகச் செயற்பட்டனர். அந்த இலச்சினையையே இன்றுவரை பாடசாலை உபயோகித்து வருகிறது. பெரியார் அவர்கள் அங்கே கடமையாற்றிய காலத்தில் பல சந்தர்ப் பங்களில் அதிபருக்காகவும் பதில் கடமை புரிந்துள்ளார்.

**பரமேஸ்வராக் கல்லூரியில் பெரியார் :**

இராமநாதன் அவர்கள் 1921ஆம் ஆண்டினிலே சைவப் பெரியாரது வேண்டு கோளினை நிறைவேற்றி வைத்தார்.

பாரிய கட்டிடங்களுடன் பரமேஸ்வராக் கல்லூரி தோன்றியது. அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள கிறிஸ்தவ பாடசாலைகள் யாவற்றிலும் வெள்ளைக் காரர்களே அதிபர்களாகக் கடமையாற்றினர். எனவே இராமநாதன் அவர்களும் தனது பாடசாலைகளில் வெள்ளைக் காரர் களையே அதிபர்களாக வைத்திருக்க வேண்டும் என்ற அவா கொண்டிருந்தார். இராமநாதன் கல்லூரிக்கு அதன் காரண மாகவே வெள்ளைக்கார மாதான Farr Florence அவர்களை நியமித்தி ருந்தார். அதே போன்று பரமேஸ்வராக் கல்லூரி யினுக்கும் Moore Pearce என்பவரை அதிபராக நியமித்தார். அவருக்கு யாழ்ப் பாணம் புதிது. எனவே அவருக்கு உதவு வதற்காக உப அதிபராக பரமேஸ்வராக் கல்லூரியினுக்கு வருமாறு சைவப் பெரி யோருக்கு வேண்டுகோள் விடுத்தார். தான் எடுத்த முயற்சியின் பயனாக எழுந்த கல்லூரி. ஆகவே அதற்கு உதவுதல் தனது தலையாய பணி என உணர்ந்த சைவப் பெரியார் மானிப்பாய் இந்துக் கல்லூரியினை விட்டு விலகி பரமேஸ்வராக் கல்லூரியின் உப அதிபரானார். ஒறேற்றர் அவர்கள் பரமேஸ்வராக் கல்லூரியில் சேவை யாற்றிய சைவப் பெரியார் பற்றி மதிப்பீடு செய்கையில், "இங்கே அவருக்கு ஏற்பட்ட புதுவிதமான அனுபவம் அவரது பெரு நோக்கிலே பாரிய மாற்றத்தினை ஏற்படுத்தி யிருக்கலாம். இது நாள் வரையில் அவர் சுழிபுரத்தில் கண்ட மாணவர்கள் எளிமை யான பயந்த சுபாவம் உள்ளவர்களாகவும், சாமான்ய குடும்பத்தினைச் சேர்ந்தவர் களாயுமிருந்தனர். அவர்களது உடை மற்றும் உணவு வழக்கங்கள் மிகவும் எளிமையானவை, வெளி உலகம் பற்றிய அறிவு பெரிதளவில் அற்றவர்களாகவே இருந்தனர். ஆனால் பரமேஸ்வராக் கல்லூரியிலோ அவர் கண்ட மாணவர் சமுதாயம் பல்வேறு திறமுடையதாய் காணப்பட்டது. புதிதாக ஒரு பாடசாலை தொடங்கியுள்ளது. எப்படி இருக்கிறது எனப் பார்க்கும் நோக்கிலேயே வேறு பல பாடசாலைகளிலிருந்து மாணவர்கள் அப்பாடசாலைகளை விட்டு விலகி இப்பாட சாலைக்கு வந்து சேர்ந்துள்ளனர். இவர்களில் பெரும் பாலோர் வசதி படைத்த குடும்பங் களின் வாரிசுகள். அவர்கள் குழப்பவாதி களாகவும் முரண் பிடிப்பவர்களாகவும் இருந்தமையால் சைவப் பெரியார் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் கையாண்ட ஒழுங்காட்சி முறைகள் இங்கே பயனளிக்கவில்லை. பல திறமை வாய்ந்த ஆசிரியர்களும் இருந்தனர். ஆனால் அவர்கள் யாபேரும் திசைக்கு ஒருவராகச் செயற்பட்டனர். பெரியார் அவர்கள் சளைக்காமல் தம்மால் இயன்ற அளவு முயற்சி எடுத்து அவர்களை ஒருங்கு சேர்த்துப் பாடசாலையின் நோக்கத்தை ஈடு செய்வதில் அதிபர் மூர் பியேர்ஸ் அவர்களுக்கு உதவினார். பின்னாளில் விக்ரோறியாக் கல்லூரியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும் சேர். பொன்னம்பலம் இராமநாதனின் சகோதரர் சேர். பொன். அருணாசலத்தின் மகனான திரு. (பின் னாளில் சேர்) மகாதேவா அதிபராகக் கடமையாற்றிய சமயத்திலும் பரமேஸ் வராக் கல்லூரியில் சேவையாற்றிய திரு. மகாதேவாவிற்கு உறுதுணையாக நின் றுள்ளார்கள்" என எழுதியுள்ளார்கள்.

வலிகாமம் மேற்கிலே ஆங்கில மூலம் கல்வி போதிக்கின்ற கல்லூரிகளில் அக் காலத்தில் மிகவும் பிரபலமாக விளங்கியது யாழ்ப்பாணக் கல்லூரி. பிக்னெல் பாதிரி

யார் அக்கல்லூரியை கண்ணும் கருத்துமாக வளர்த்தார். ஹண்டி பேரின்பநாயகம், **J.V.** செல்லையா போன்ற மிக்க திறமைசாலி களான ஆசிரியர்கள் அங்கே கடமை யாற்றினார்கள். எனவே அதன் புகழ் யாழ்ப்பாணம் மாத்திரமல்லாமல் இலங்கை முழுவதுமே பரவிற்று. விக்ரோறியாக் கல்லூரி அரசாங்கத்திடம் கையளிக்கப் பட்டிருந்தாலும் அதன் முகாமைத்துவம் கல்லூரியினைத் தோற்றுவித்தோர் குல வம்சத்திடமே இருந்தது. அப்போதைய முகாமையாளராக விளங்கிய திரு.க.செல் லப்பா அவர்கள் விக்ரோறியாக் கல்லூரி யினையும் யாழ்ப்பாணக் கல்லூரியினது தரத்தினிற்குக் கொண்டு வருவதற்கு ஆவன செய்யவேண்டுமென உறுதி பூண்டார். அதற்காக திறமைசாலிகளான ஒரு அதிபரைக் கண்டெடுக்க வேண்டும், யாது செய்யலாம் என எண்ணியவருக்கு உடனடியாக மனதில் பட்டது சைவப் பெரியாரது திருநாமமே. அவர்களுடைய கற்பிக்கும் ஆற்றல், நிர்வாகத் திறமை, சைவ சமயத்தில் உள்ள ஈடுபாடு பற்றி அறிந்ததே. எனவே அவரிடம் நேரடி யாகவே தனது எண்ணத்தினைத் தெரி வித்தபோது பெரியார் அவர்கள் சம்மதம் தெரிவித்தார். அதன் நிமித்தம் 1924ஆம் ஆண்டு விக்ரோறியாக் கல்லூரி அதிப ராகப் பதவி ஏற்றார். பெரியார் அவர்கள் பரமேஸ்வராக் கல்லூரியினை விட்டு விக்ரோறியாக் கல்லூரிக்கு அதிபராகச் சென்ற போதும் இராமநாதன் வள்ளலார் அவர்கள் சமயம், கல்வி சம்பந்தமான முடிவுகள் எடுக்கும் போது பெரியார் அவர்களைக் கலந்தாலோசிக்கத் தவறிய தில்லை. விக்ரோறியாக் கல்லூரியே நம்மவர்களால் தோற்றுவிக்கப்பட்ட முதல் ஆங்கிலப் பாடசாலை. இந்து சமயச் சூழலில் ஆங்கிலப் பாடசாலைகள் தோற்று விக்கப்பட வேண்டும் என்ற நாவலரின் சமய மறுமலர்ச்சிக்கான அறைகூவலுக்கு முதலில் கைகொடுத்தவர் சுழிபுரத்தினைச் சேர்ந்த கனகரத்தின முதலியார் அவர்கள். ஆங்கில மூலம் கல்வி ஊட்டப் பாட சாலைகளையும் ஸ்தாபிக்க முன்வந்தது. யாழ்ப்பாண கல்லூரியிலே கல்வி கற்றவர் கனகரத்தின முதலியார். அதற்காகத் தனது முதற்பெயரினை கிறிஸ்தவ பெயராக இணைத்தும் கொண்டவர். முதலியார் அவர்கள் தமது ஊர் குழந்தைகள் சைவச் சூழலிலே கற்பதற்கான ஆங்கிலப் பாடசாலை ஒன்றினை நிறுவ வேண்டும் என்ற வேட்கையால் 1876ஆம் ஆண்டிலே சுழிபுரம் இந்து ஆங்கிலப் பாடசாலை எழுந்தது. அரசாங்கத்தின் பூரண உதவி இன்றி பாடசாலைகள் நடத்துதல் அத்தனை எளிமையானது அல்ல. நாவலர் முயற்சி யால் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகள் தொடர்ந்து நடத்த முடி யாமையால் மூடப்பட்டன. ஆனால் கனக ரத்தின முதலியார் திடசங்கல்பம் உடைய வராய் கஷ்டப்பட்டுப் பாடசாலையை நடத்தினார். ஆனால் எத்தனை காலம் தான் தொடர்ந்து தனது கைப்பணத்தினை இழப்பது. கனகரத்தின முதலியார் பாட சாலையை மூடவிரும்பவில்லை. மாற்றாக அவருக்கு இன்னொரு வழிபுலப்பட்டது. ஊரின் பிள்ளைகளுக்காகவே ஆங்கிலப் பாடசாலை. அதனை மிஷனறி தவிர்ந்த எவரும் நடத்தினால் மதமாற்றத்திற்கு இடமில்லை என்பதை உணர்ந்தவராக அரசாங்கத்திடமே பாடசாலையைக் கையளித்தால் என்ன என முதலியார் எண்ணினார். அவருக்கு அரசாங்கத்திலே நிறைந்த செல்வாக்கு இருந்தமையால் சுலபமாக பாடசாலையை அரசாங்கத்

திடம் கையளிக்க முடிந்தது. 1892ஆம் அண்டினிலே இது நடைபெற்றது. இலங்கையிலே முதன் முதலாக அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்ட தனியார் பாடசாலை என்ற சிறப்பு விக்ரோறியாக் கல்லூரியினுக்கே உரியது. இப்பாடசாலை அரசாங்கப் பாடசாலையாகியபோதும் முகாமையாளராக திரு.கனகரத்தின முதலியாரும் அவரது வாரிசுகளும் தொடர்ந்து இயங்கி வந்தனர். அரசாங்கம் 1944இல் இலவசக் கல்வித் திட்டம் புகுத்திய சமயத்தில் குடாநாட்டில் ஆங்காங்கே ஆங்கிலப் பாடசாலைகளை ஸ்தாபித்தது. அதுவரை யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரேயொரு அரசாங்கப் பாடசாலையாக விக்ரோறியாக் கல்லூரி திகழ்ந்தது. இரு பாலாரும் கல்வி கற்கும் பாடசாலையாகவும் வளர்ந்தது. ஆரம்பத்தில் முகாமையாளர் திரு. செல்லப்பாவின் இல்லத்தில் ஒரு பகுதியே விடுதிச் சாலையாகவும், தூரத்திலிருந்து வந்து பணியாற்றும் ஆசிரியர்கள் தங்கும் இடமாகவும் அமைந்திருந்தது. விக்ரோறியாக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள ஏனைய கல்லூரிகளுடன் கிரிக்கட், உதைபந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களிலும் போட்டியிட்டு சாதனை படைத்தது. ஒன்பது ஆண்டுகள் மாத்திரமே பெரியார் அவர்கள் விக்ரோறியாக் கல்லூரியின் அதிபராகப் பதவியாற்றினார். 1933ஆம் ஆண்டினிலே பதவியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டார். ஆனால் இந்த ஒன்பது ஆண்டுகளும் விக்ரோறியாக் கல்லூரியின் பொற்காலம் என்று பல்லோரும் பாராட்டும் அளவினுக்கு சைவப்பெரியார் அதிபராகக் கடமையாற்றிய போது கல்லூரி அபரிமிதமான வளர்ச்சியடைந்ததை எவரும் மறுப்பதற்கில்லை. காலையில் பாடசாலை ஆரம்பமாவதற்கு முன்னர் மாணவர்கள் யாபேரும் ஒருங்கே கூடுவதற்கான பிரார்த்தனை மண்டபத்தினை நிர்மாணித்து தினசரி காலை வேளைகளில் அங்கே குழுமி தேவாரம் பாடிய பின்னரே வகுப்புகளில் பாடபோதனை ஆரம்பிக்கச் செய்தார். அவரது கோலம் பெரியாரது சைவத் திருக்கோலத்தை இலக்கிய கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் நேர்முக வர்ணனையாகத் தருகிறார் என பேராசிரியர் நா. சுப்பிரமணியன் விபரித்துள்ளார். 'ஒல்லியான தேகம் – குடுமி – மடித்துக் கட்டிய எட்டு முழ வேட்டி – காற்சட்டை, சப்பாத்து, அவர் கால்கள் அறியாதவை – சட்டை தரிப்பது மிக அருமை. சிறிய அங்க வஸ்திரம். மிதியடி இவ்வாறு காட்சியளித்தார்' என்கிறார்கள். ஆச்சரியமான அதிசயிக்க வைக்கும் கோலம். ஏறக்குறைய சமகாலத்துப் பாடசாலை அதிபர்களாக விளங்கியவர்களில் ஒரு சாரார் இளைஞர் காங்கிரஸின் பாதிப்பினால் தேசிய உடையில் காட்சிதர மற்றொரு சாரார் மேலைத்தேய உடையிலேதான் மிளிர்ந்தார்கள். எனவே பெரியாரின் இக்கோலம் ஒரு பாடசாலை அதிபருக்கு அசாதாரணமாக இருந்துள்ளது. அவரது ஆளுமைக்கு அவரது உடையும் காரணமாக இருந்தது என்பது உண்மை. அவர் பற்றி எப்படியான அபிப்பிராயம் பொதுவாக இருந்தது என்பதை அறிவதற்காக எனது ஆசான் அதிபர் ஒறேற்றர் அவர்கள் எழுதிய கட்டுரையின் ஒரு பகுதியை இங்கே தருகிறேன். "நாம் மாணவர்களாக இருந்த காலத்தில் விக்ரோறியாக் கல்லூரி பற்றி பெரிதாகப் பேசப்படவில்லை. ஆனால் ஒதுக்குப் புறமாக அமைந்த சுழிபுரம் எனும் கிராமத்திலே வித்தியாசமான முறையிலே மாணவர்களுக்கு அறிவுபூர்வமான

கல்வியை சிவபாதசுந்தரம் என்பவர் வழங்குகிறார் எனக் கேள்விப்பட்டுள்ளேன். மனதில் பதியக்கூடிய தோற்றம், சற்றுப் பழமை வாய்ந்த கோலம், விதிகளுக்கு மாறாக யாரும் அண்ட முடியாத அள வினுக்கு ஒதுங்கி நடமாடும் தன்மை, மாணவர்களுக்கு ஈன இரக்கமின்றி தண்டிக்கும் மனப்பான்மை, மிக்க கடின மான ஒழுக்கவாதியாக நாவலர் அவர்கள் சைவ வினாவிடையில் கூறியுள்ள அத்தனை நடைமுறைகளையும் கடைசி அட்சரம் வரை பின்பற்ற வேண்டும் என்ற தீவிர வாதம் மிக்கவராய் சைவப் பெரியார் வாழ்ந்தார் என்றே கேள்விப்பட்டேன். அவரைப் பற்றிய இத்தகைய விமர்சனம் மாயையானதும், கட்டுக்கதையாகவும் இருந்ததைக் காலப்போக்கில் என்னால் அறிந்து கொள்ள முடிந்தது. மாறாக ஒரு எளிமையான, துறவி போன்ற உணர்வூட்ட வல்ல, மாணவரின் மேல் மிக்க அனுதாபம் காட்டவல்ல ஒரு ஆசிரியரைத் தான் அவரில் காண முடிந்தது.'

**அவரது சமூக, சமயப் பணிகள் :** விக்ரோறியாக் கல்லூரி சிறந்த கல்வியைப் புகட்டவல்ல கல்லூரியாகத் தொடர்ந்து விளங்கவேண்டுமாயின் அதற்கு ஊட்டப் பாடசாலைகள் கல்லூரியின் அண்மையில் உள்ள கிராமங்களில் நிறுவப்படவேண்டும் என்பதை உணர்ந்த சைவப் பெரியார் அவர்கள் அண்டிய கிராமங்களில் உள்ள தனவந்தர்கள் பலரை நாடி ஆங்காங்கே சைவப் பள்ளிகளை நிறுவுமாறு வேண்டு கோள் விடுத்தார். அவரது முயற்சி பலனளிப்பதற்கு நன்னோக்கம் கொண்ட பலர் உதவி செய்தனர். பெரியார் அவர்கள் விக்ரோறியாக் கல்லூரியினருக்கு அதிபர் பதவி ஏற்றமை சுழிபுரம் மாத்திரமல்லாமல் சுற்றயல் கிராமங்களுக்கும் நன்மை பயப்பதாய் அமைந்தது. சைவ சமயிகள் ஆலயங்களிலே நடத்துகின்ற உற்சவங் களின் போது நடைபெறும் ஆகமக் கிரியை களில் சைவசீலம் பேணப்படவில்லை என்பதைக் கண்டு மனம் வருந்திய பெரியார் அவர்கள் இதனைச் சீர்செய்ய வேண்டும் என்று பிரயத்தனப்பட்டார். மூன்று முக்கியமான கிரியைகள் சம்பந்த மாக பெரியார் மேற்கொண்ட முயற்சிகள் ஓரளவு வெற்றியீட்டின என்றே கூற வேண்டும். அவரது முயற்சி ஏனைய கிராமங்களுக்குச் சென்று படிப்படியாக பயன் ஈர்த்தமை பெரியாரின் முயற்சிக்குக் கிடைத்த வெற்றி என்றே கூறவேண்டும்.

1. ஆலயங்களில் திருவிழாக் காலங்களில் ஆடு, கோழி பலியிடும் பழக்கத்தினை பெரியார் அவர்கள் அறவே வெறுத்தார். தொல்புரம் வழக்கம்பரை அம்மன் கோவிலில் பலியிடும் ஈனச் செயல் காலம் காலமாக நடைபெற்று வந் துள்ளது. பெரியார் ஆலய நிர்வாகி களிடமும் மக்களிடமும் இச்செயலில் ஈனத் தனத்தினை எடுத்துக் கூறி உயிர்ப்பலிக்கு முற்றுப் புள்ளி வைத்தார். இவ்விதமாக உயிர்ப்பலியினை விட்ட தில் வழக்கம்பரை அம்மன் கோவில் முன்ன்ணியில் இருந்தமை பெரி யாருக்கு அவ்வூர் மக்கள் கொடுத்த பெரு மதிப்பே காரணமாகியது.

2. திருவிழாக் காலங்களில் ஆலயங் களிலே உற்சவமூர்த்தி மிகவும் அலங் கரிக்கப்பட்டு பிரகாரம் வலம் வருவது வழக்கம். அந்த உற்சவ மூர்த்திக்கு அலங்காரம் செய்யும் பொழுது பொய்க்கால் கைகள் வைத்து அழகு செய்வார்கள். இதனைச் சாத்துப்படி

என்பார்கள். இதன் மூலம் உற்சவ மூர்த்தியின் உண்மை சொரூபம் முற்றாகவே மறைக்கப்பட்டு விடும். சைவப் பெரியார் அவர்கள் இதனையும் விரும்பவில்லை. தெய்வ மூர்த்தம் பொம்மை அல்ல. ஒரு பொம்மைக்குத் தான் கைகால்கள் கட்டிச் சோடிக்கலாம் என எடுத்துக் கூறி இந்த முறை அலங்கரிப்பையும் நிறுத்த வைத்தார்.

3. பொதுவாகப் பல ஆலயங்களில் உற்சவ காலங்களின் போது சின்ன மேளம் என்று அழைக்கப்படும் நடன மாதரை ஈடுபடுத்துவதை சைவப் பெரியார் ஈனமான செயல் எனக் கண்டித்தார். தேவடியாள் என இழிவான முறையில் அவர்களை அழைப்பார்கள். பெரியார் அவர்கள் இந்தப் பண்பாடற்ற நடன நிகழ்ச்சியைப் பெரிதும் வெறுத்தார். இத்திருவிழாக்களின் போது சுவாமிக்குச் செலுத்தும் கௌரவம் போல் நூறு மடங்கு கௌரவம் நடனமாதர்க்குச் செலுத்த வைக்கின்றன. இதை அவதானிக்கும் வெளிநாட்டு யாத்திரிகர், கடவுளுக்கு நாம் வழங்கும் கௌரவம் நடனமாதர்க்கு நாம் வழங்கும் கௌரவத்தை விடத் தாழ்ந்தது எனக் குற்றம் சாட்டுகிறார்கள் என அதனைக் கண்டித்து பல ஆலயங்களில் அந்த நடனம் நடத்துவதை நிறுத்தியுள்ளார். இவ்வாறு விக்ரோறியாவினைச் சூழ்ந்த கிராமங்கைளயும் சைவசீலச் சிறப்புக்கு உள்ளாக்கிய பெருமை சைவப் பெரியாருக்கே உண்டு. உண்மையில் இந்த முயற்சியில் அவரை முன்னோடி என்றே கூற வேண்டும். அவர் கொடுத்த ஆரம்பம் மெல்ல மெல்ல ஏனைய கிராமங்களுக்கும் பரவியது எனலாம்.

**மாணவர் நலன் கருதி அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டார்.**

மாணவர் நலன் கருதி பெரியார் கல்வி அமைச்சின் பல செயற்திட்டங்களுக்கு உடந்தையாக இருந்தார். அவரது ஆலோசனைகளை கல்வி அமைச்சர் மற்றும் கல்விப் பணிப்பாளர் பெரிதும் வரவேற்றனர். அவரது ஆலோசனைகளில் பிரதானமானது சமயக் கல்வியை கட்டாய பாடமாகப் பாடவிதானத்தில் புகுத்தியமைக்கு அடிகோலியதே. மாணவர்களுக்கு சமயக் கல்வி புகட்டப்பட்டால் அவர்களுடைய ஒழுங்காட்சி சால்புடையதாக அமையும் என்ற சைவப் பெரியாரின் வேண்டுகோள் இலங்கை அரசினால் அங்கீகரிக்கப்பட்டமை பெருமைக்குரியது. அண்மை நாடான இந்தியாவில் கூட இது நாள் வரை சமயக் கல்வி கட்டாய பாடமாகப் போதிக்கப்படவில்லை.

**பொதுநல அமைப்புக்கள் :**

ஆசிரியர் சங்கங்கள், கல்விக் கழகங்கள், சைவ மகா நாடுகள், நலன்புரிச் சங்கங்கள் என்பனவற்றில் சைவப் பெரியார் தலைவராகவிருந்து உயர்ந்த இலட்சியங்களையும் நல்ல கருத்துக்களையும் பிறர் மனத்தில் கொள்ளச் செய்து பணியாற்றினார். நாவலர் பெருமான் காட்டிய வழிகளையே எல்லோரும் கடைப்பிடித்து வரவேண்டுமென்று வலியுறுத்தி வந்துள்ளார். இந்து கல்விச் சபையினது தலைவராகவும் திருக்கேதீஸ்வர புனருத்தாரண சபைத் தலைவராகவும் பெரியார் அவர்கள் சேவையாற்றியுள்ளார்கள். சைவக் குடும்பத்துப் பிள்ளைகள் கிறிஸ்தவக் கல்வி நிலையங்களில் கற்பதனால் சைவத்தை மெல்ல மறப்பதற்கான வாய்ப்பு உள்ளது என்பதை உணர்ந்த பெரியார் அவர்கள் அந்த நிலையினை நீக்க

வேண்டும் என்ற சங்கல்பம் கொண்டார். யாழ்ப்பாணத்தில் சைவத்தையும் சைவப் பண்பாட்டையும் அழியாது உயிருடன் வைத்துப் பேணுதற்கு ஆறுமுகநாவலரின் பெரு முயற்சியைத் தொடர்ந்து அந்த அடிச்சுவட்டினிலே வாழ்ந்து வந்த சைவப் பெரியார் அவர்கள் சைவ ஆசிரியர்களை யும், சைவப் பள்ளிகளையும் உருவாக்கு தற்கு ஒரு சங்கம் காண்பதே சரியான நெறியென்று சேர். பொன். இராமநாதனைத் தலைவராகக் கொண்ட சைவ விருத்தியா விருத்திச் சங்கம் (Hindu Board of Education) ஒன்றினை 1923ஆம் ஆண் டினில் உருவாக்க முன்னின்று உழைத்தார். இதன் தலைவராக பெரியார் அவர்கள் ஒரு முறை பதவி வகித்துள்ளார்கள். இந்த முயற்சியின் காரணமாகவே தங்களிடம் இருந்த சொற்ப பணத்தினை மூலதன மாக வைத்து அர சாங்கத்திடம் இருந்து எந்தவித உதவியும் பெறாமலே சைவப் பள்ளிகள் பல எழுந்தன. 'நாவலருக்குப் பின் நமக்கோர் காவலன்' என எல்லோ ராலும் வாயாரப் புகழப்பட்ட 'இந்து போர்ட்' இராசரத்தினம் என்ற சான் றோனை கல்விப் பணியினுக்கு ஈர்த்த பெருமை சைவப் பெரியாரைச் சார்ந்ததே. சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் நிரந்தர உறுப்பினராகி 1930ஆம் ஆண் டினில் அதன் பொதுச் செயலாளராகிய இராசரத்தினம் அவர்கள் மிகுந்த வரு வாயினைத் தரவல்ல சட்டத்தரணித் தொழிலினையும் தூக்கி எறிந்துவிட்டு இச்சபையின் பாடசாலையின் பொது முகாமையாளர் பதவியினை ஏற்றுத் திறம்பட நடத்தினார். ஆசிரியர்களுக்குப் பயிற்சி தருதற்காக இச்சபையின் கீழ் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஒன்றும் நிறுவியுள்ளார்கள்.

**அவரது எழுத்தாற்றலும் பிரசுரங்களும் :**

சைவப் பெரியார் அவர்களுக்குத் தான் பெற்ற பன்முகப்பட்டட அறிவினை மற்ற வர்களும் நுகரவேண்டும் என்பதில் பெரிதும் ஆர்வம் இருந்து வந்துள்ளது. எனவே, அவ்வப்போது தனது எண்ணக் கருத்துக்களை நூலாகச் செய்து வந்துள் ளார்கள். எளிமையான முறையிலே எவர்க்கும் விளங்கும் வண்ணம் எப்பொருளி னையும் தகுந்த உதாரணங்களுடன் விளக்குவதில் அவர் வல்லவர். அக்காலத்தில் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கவல்ல ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை கொழும்பில் மாத்திரம் ஒன்றிருந்தது. ஆகவே ஆசிரியத் தொழிலினைத் தேர்ந்தெடுப்போர்க்கு உதவும் வண்ணம் 1919ஆம் ஆண்டிலேயே "படிப்பித்தலின் முறையும் விதியும்" என்ற நூலினை வெளியிட்டுள்ளார்கள். பாட சாலை மாணவர்களுக்கு உதவும் நோக்குடன் ஆறுமுகநாவலர் அவர்களின் சைவ வினாவிடையினை ஒத்த "சைவபோதம்" 1, 2 என்ற தொகுதிகளாகவும், 'திருக்குறள் மணிகள்', 'திருவாசக மணிகள்', 'சைவ சமயசாரம்', 'சைவசமயத்தின் பெருமை' மற்றும் 'சைவக் கிரியை விளக்கம்' போன்ற நூல்களை ஆக்கியுள்ளார். சைவப் பெரியாரால் எழுதப்பட்ட "அளவை நூல் 1953ஆம் ஆண்டினிலே சிதம்பரத்தில் உள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழ கத்தினால் வெளியிடப்பட்டது. அவரது ஏனைய நூல்களின் பட்டியல் கீழே உள்ளது.

**ஆங்கிலத்தில்**

1. Essentials of Logic.
2. Outline of Siva
3. Saiva School of Hinduism
4. Glories of Shaivaism
5. Arumuga Navalar

6. Sivagnanabotham with a rejoinder to a Christian Critic

**தமிழில்**

1. சைவபோதம் 1, 2
2. திருவருட்பயன் உரை
3. சைவசமய சாரம்
4. சுப்பிரமணியப் பெருமான் கொண்ட திருப்பெரு வடிவம்
5. கந்தபுராண விளக்கம்
6. சைவகிரியை விளக்கம்
7. கல்வி விதிகளும் முறைகளும்
8. அகநூல்.

"கணிதவியல், சமயவியல்களோடு உளவியல் துறைகளில் கரைகண்டவரா தற்கேற்ப, தம்நூலாற் பெரிதும் பயன்பெற வேண்டிய தற்காலத்தவர்க்குப் பிரீதி யாகும் நவீன அறிவியற் போக்குக் கிணங்கும் வகையில் சைவ நுண்பொருள் விளக்கங்களை நூதனமான உதாணரங் களில் வைத்து அவர் விளக்கியிருக்கும் திறன் அபூர்வமானது" என சைவப் பெரியாரது 'Glories of Shaivaism' (சைவ மகத்துவம்) என்ற ஆங்கில நூலினைத் தமிழாக்கம் செய்த பண்டிதர் கந்தையா அவர்கள் தனது முன்னுரையில் குறிப்பிட் டுள்ளார்கள்.

அவர் தர்க்க சாஸ்திரம் கற்பிப்பதில் வல்லவராகவும் சைவசித்தாந்த தத்து வத்தினை விளக்குவதில் நிபுணராகவும் விளங்கினார். பாட விதானத்தில் அமைந்த எந்தப் பாடத்தினையும் மிகத் திறமை யாகக் கற்பிக்கும் ஆற்றல் நிறைந்த அறிவாளியாக அவர் மிளிர்ந்தார். ஒரு அதிபர் மாணவர் அபிமானம் பெற்ற சிறந்த அதிபராவதற்கு இதைவிட வேறு கொடை தேவையில்லை. அக்காலத்திய பாட சாலைகளில் மிகவும் உயர்வகுப்பாக விளங்கியது Matriculation வகுப்பு. இதற்கான பரீட்சை இலண்டன் பல்கலைக் கழகத்தினால் நடாத்தப்பட்டு வந்தது. இப்பரீட்சைக்காக மாணவர்களுக்கு வேண்டிய பயிற்சியைக் கொடுப்பதில் வல்லுநராக அதிபர் விளங்கியமையால் விக்ரோறியாக் கல்லூரி மாணவர்கள் அப்பரீட்சையில் சிறப்புச் சித்திகளைப் பெற முடிந்தது. பின்தங்கிய மாணவர்களுக்கும் மனோதத்துவ ரீதியாகவும் பெரியார் அவர்கள் வேண்டிய வகையில் உதவி நல்கி அவர்களை முன்னேற வைத்தார். இதன் காரணமாக விக்ரோறியாக் கல்லூரி ஏற்படுத்திய நற்பெயர், பரீட்சைகளில் சித்தியெய்த முடியாது என நிராகரிக்கப் பட்ட ஏனைய கல்லூரி மாணவர்களுக்கும் தஞ்சம் கொடுக்கவேண்டி வந்தது. அவர்களின் அபிலாசையை ஈடேற்ற அதிபர் உதவவே செய்தார். அவர்கள் பலர் உயர்ந்த பதவிகளைப் பெறுவதற்கு வேண்டிய கல்வியைத் தாராளமாக அதிபரால் வழங்க முடிந்தது. அவ்விதமாக அனுகூலம் பெற்றவர்களில் பின்னாளில் யாழ். இந்துக் கல்லூரியின் அதிபராகப் புகழீட்டிய திரு. N.சபாரத்தினமும், இலங்கை வங்கியின் பொது முகாமையாளராகக் கடமையாற்றிய உலகம் புகழும் திரு.C. லோகநாதனும் அடங்குவர். 1985ஆம் ஆண்டினிலே கல்லூரியின் பரிசளிப்பு விழாவினுக்குப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அதிபர் சபாரத்தினம் அவர்கள் இதனைப் பகிரங்கமாகவே எடுத்துரைத்துள்ளார்கள்.

சைவப் பெரியார் அவர்கள் தலை சிறந்த எழுத்தாளராகவும் விளங்கினார்.

ஆங்கிலம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் ஆற்றலுடன் எழுதும் தகுதி பெற்ற சைவப் பெரியாரின் ஆங்கில நூலான 'Shaiva School of Hinduism' மிகவும் பிரபலமானது. இங்கிலாந்தில் உள்ள Allen & Urvin மூலமாக இங்கிலாந்தில் பிரசுரிக்கப்பட்ட இந்நூல் இங்கிலாந்து, இந்தியா மற்றும் அமெரிக்கா எங்கணும் வாழ்ந்த பேரறிவாளர்களின் ஏகோபித்த பாராட்டினைப் பெற்றதுடன் அவரை உலகறியச் செய்துவிட்டது. சைவ சித்தாந்த தத்துவத்தினை விளக்கும் அரிய நூலாக இது கணிக்கப்பட்டுள்ளது. தலை சிறந்த மரபுவழி நூலாக ஏற்கப்பட்ட இந்நூலினை காசி இந்துப் பல்கலைக்கழக மெய்யியல் ஆய்வுத்துறை மாணவர்கட்கு பாடப்புத்தகமாக்கியது பெரியார் அவர்களின் மோதாவிலாசத்தினை பல்கலைக் கழக மட்டத்திலும் பெரிது மதித்து வந்தனர் என்பதற்கு எடுத்துக்காட்டு.

**ஓய்வு பெற்றபின்னர் :** விக்ரோறியாக் கல்லூரியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் பெரியார் அவர்கள் கந்தவனம் என்னும் சுப்பிரமணியக் கடவுளின் கோயிலின் பக்கத்தில் ஒரு சிறு குடிலை அமைத்து அங்கு குடியேறினார். இக்குடிலினில் வாழ்ந்து கொண்டே "The Shaiva School of Hinduism" என்ற ஆங்கில நூலினை எழுதி 1934ஆம் ஆண்டினிலே வெளியிட்டார். 1941, 1945ஆம் ஆண்டுகளில் பெரியார் அவர்கள் தல யாத்திரையாக இந்தியா சென்றுள்ளார். 1948ஆம் ஆண்டினிலே தருமபுர ஆதீனத்தாரால் இவர் அழைக்கப்பட்டு அங்கே சில நாட்களும் சிதம்பரத்தில் சில நாட்களும் தங்கி நல்லசாமிப்பிள்ளை அவர்களின் சிவஞானசித்தியார் ஆங்கில மொழி பெயர்ப்பினைத் திருத்தியும் புதுப்பித்தும் அச்சிடுவித்தார்.

**சிறுமை கண்டு பொங்குவார் :**

திருக்கேதீஸ்வர ஆலயத்தினையும் அங்குள்ள குறைகளையும் கவனித்த பெரியார் அவர்கள் அதற்கான நிவாரணத்தினைக் காண விளைந்தார். தன்னாலான திருப்பணிகளைச் செய்ய எண்ணி ஆவன செய்தார். அங்கே அடியார்கள் தங்குதற்காக இரண்டு அறைகளைக் கொண்ட மடம் ஒன்றினை முதலியார் முத்துத்தம்பிப்பிள்ளை அவர்களின் உதவியோடு கட்டிமுடித்து திருஞானசம்பந்தர் மடம் எனப் பெயரும் சூட்டினார். சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்களுடைய உதவியுடன் நடேசர் படிமத்தினை ஸ்தாபித்தார். ஆலயத்தில் திருப்பணிச் சபையின் தலைமைப்பதவி ஏற்று பல திருப்பணி வேலைகளைச் செய்து முடித்தார். நவக்கிரகம் ஆலயத்தின் அகத்தில் தாபிக்கக் கூடாது. அது பிற்கால வழக்கு என்பது பெரியாரின் வாதமாக இருந்தது. இதன் காரணமாக சபையினருக்கும் பெரியாருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. சபையினர் பெரியாரின் கருத்துக்கு மதிப்புக் கொடுக்காது ஆலயத்தின் அகத்தேயே நவக்கிரகத்தினை தாபித்தனர். இது பெரியாரின் மனதினைப் புண்படுத்தியது. ஆகவே தலைமைப் பதவியைத் தூக்கி எறிந்துவிட்டு வெளியேறினார். தனது கொள்கையில் அசாத்திய நம்பிக்கை உடையவராகிய பெரியார். சைவப் பெரியாரது சிறுமை கண்டு பொங்குகின்ற தனித்துவத்தினை இன்னொரு நிகழ்ச்சி மூலம் அறிய முடிகிறது. வயலெட் பரஞ்சோதி என்ற பெண்மணி சென்னைப் பல்கலைக்கழ

கத்தினை கலாநிதிப் பட்டத்திற்காக சைவசித்தாந்தத்தினை ஆராய்ந்தார். அதன் காரணமாக எழுதிய ஒரு நூலில் அப்பெண்மணி சைவசித்தாந்தக் கோட் பாடுகளில் ஐயம் எழக்கூடிய விதத்தில் தமது முடிவுகளைத் தெரிவித்திருந்தார். இம்முடிவுகள் சைவசித்தாந்தத்தின் விழு மியங்களைத் தவறாக மதிப்பிடும் வகையில் அமைந்திருந்தன. தமிழகத்தில் மறைமலை அடிகள் உட்பட்ட பல சைவ சமயச் சான்றோர் தனிப்பட்ட முறையில் இதன் அபத்தம் பற்றிப் பேசினார்களே அன்றி பகிரங்கமாகக் குரல் கொடுக்க எவருமே முன்வரவில்லை. என்ன செய்ய லாம் எனத் தத்தளித்த தமிழகத்தில் உள்ள தருமபுர ஆதீனம் சைவப் பெரியாரது உதவியை நாடியது. அப்பெண்மணியினது அவதானங்களுக்கு மறுப்புரை எழுதித் தருமாறு அவரைக் கேட்டுக் கொண்டது. சைவப் பெரியார் இசைந்து எழுதிக் கொடுத்ததே An Outline of Sivagnana Bhodam (with a Rejoinder to a Christian Critic.) சைவப்பெரியாரின் வாதம் ஜெயித்ததை அந்த அம்மையார் அந்நூலின் இரண்டாவது பதிப்பில் செய்த மாற்றங் களைக் கொண்டு உணர முடியும்.

1953ஆம் ஆண்டினிலே 'சைவ மகத்துவம்' (Glories of Shaivaism) என்ற ஆங்கில நூலை அச்சில் பிழை திருத்தம் செய்து கொண்டிருக்கும் காலத்தில் சைவப் பெரியார் இவ்வுலகை நீத்தார். இந்நூல் சம்பந்தமாக பெரியார் தனது பெறா மகனுக்கு எழுதிய சிறு குறிப்பினைக் கண்டவர்கள் மனம் வெதும்புவர்.

இந்த மார்கழியில் நான் சுகவீன முற்றிருந்தபோது, இனித் தர்க்கம் பற்றி எழுதுவதை விட்டு, சைவத்தின் சிறப்புகள் பற்றி ஒரு நூல் எழுதுங்கள் என நீர் கேட்டிருந்தீர். இப்போது நூலை எழுதி முடித்துள்ளேன். இவ்வேலை என் தேக சுகத்திற் பெரும் பகுதியைப் பாதித்திருக் கிறது. தலையிடி, சமியாக்குணம், முத லான நோய்களால் பல நாளாகப் பாதிப் புற்றுள்ளேன். இனி இதன் குறைகளை ஆராய்ந்து, திருத்தி, இதன் மொழி நடையை மேம்படுத்தி இதற்கு இறுதி வடிவம் கொடுப்பது உமது பொறுப்பாகும். இவை அனைத்தையும் தானாகச் செய்ய முடியாத அளவுக்கு மிகவும் இளைத்துப் போனேன்.

அன்புள்ள
சிவபாதசுந்தரம்

சைவப் பெரியார் உயிர்நீத்த பின்னர் இந்நூல் பிரசுரிக்கப்பட்டது. அந்நூலினது தமிழாக்கம் பண்டிதர் மு. கந்தையா அவர்களால் செய்யப்பட்டு 1997ஆம் ஆண்டினிலே கோலாலம்பூரினில் உள்ள 'சைவசித்தாந்தி சிவபாதசுந்தரனார் குருபூசை அறங்காப்பினரால் பிரசுரிக்கப் பட்டுள்ளது.

# வெள்ளி, பொன், வைர, பவள, நூற்றாண்டு விழாக்கள் மங்கலச் சடங்கு முறை

தனிமனித வாழ்விலும் சரி, நிறுவனங்களின் வரலாற்றிலுஞ் சரி குறிப்பிட்ட சில ஆண்டுகள் சிறப்புடையவை. அதுவரை செய்த பெருமைக்குரிய சாதனைகளைப் பாராட்டியும், எதிர்காலத்தில் செய்யப் போகும் கருமங்களை வாழ்த்தியும் விழாக்கள் கொண்டாடப்படும். அவை யாவன வெள்ளிவிழா, பொன்விழா, மணிவிழா, சஷ்டியப்தபூர்த்தி விழா, பவளவிழா, முத்துவிழா, நூற்றாண்டு விழா மற்றும் சதாபிஷேகம் என்பனவாகும்.

25 ஆண்டு நிறைவில் வெள்ளி விழாவும்
50 ஆண்டு நிறைவில் பொன் விழாவும்
60 ஆண்டு நிறைவில் மணி விழாவும் (இது வைர விழா என்றும் சொல்லப்படும். திருமணமாகி 60 ஆண்டு நிறைவில் சஷ்டியப்த பூர்த்தி விழாவும் கொண்டாடப் படுவது வழக்கம்)
75 ஆண்டு நிறைவில் பவள விழாவும்,
100 ஆண்டு நிறைவில் நூற்றாண்டு விழாவும் கொண்டாடப்படுவது வழக்கம்.

**வெள்ளிவிழா :**

இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவிற் கொண்டாடப்படுவது வெள்ளி விழா ஆகும். இல்லற வாழ்வின் சுகத்தை இருபத்தைந்து ஆண்டுகள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் எவ்வித இடருமின்றிப் பகிர்ந்து கொண்டு தம்பதியர் தம் குடும்ப நலன் பரிமளிக்க உதவிய உறவினரை, நண்பர்களை, அயலவர்களை, விருப்பிற்குரியவர்களை, மதிப்பிற்குரியவர்களை இருபத்தாறாவது ஆண்டின் தொடக்க நாளில் அழைத்துச் சில வழிபாட்டுடன் விருந்தளித்துக் குதூகலித்து வாழ்த்துப் பெறுவர்.

**பொன் விழா :**

ஐம்பது ஆண்டு நிறைவில் கொண்டாடப் படுவது பொன் விழா எனப்படும். ஒரு மனிதன் பிறந்து ஐம்பது ஆண்டுகள் நிறைவாகும் போது கொண்டாடப்படுவது மனித வாழ்வியல் மங்கலம் ஆகும். அப்போதும் அவன் மனிதனாக வாழ்ந்திருந்தால் தான் அந்த மங்கல கருமத்திற்கு உரித்துடையவன் ஆவான் என்பதைக் கருத்திற் கொள்ளல் வேண்டும்.

திருமணம் செய்து கொண்ட ஆண், பெண் எனும் இருவர் குழந்தைப் பேறுடையவர்களாக, அண்டை அயலவர் உற்றார், உறவினர் போன்றும் பணிக்கொடைக்கு உரித்துடையவர்களாக வாழ்ந்திருப்பின் சமூகம் அவர்களுக்குப் பொன்விழா கொண்டாட வேண்டும். எதிர்காலச் சமுதாயக் குழந்தைகள் இந்தப் பாராட்டுக்கான வாழ்த்துக்களைப் பார்த்துத் தாம் தம்மைச் செவ்விய நெறியிற் செலுத்த இவை வழி செய்யும். குறிப்பிட்ட தம்பதியர்களும் தம் உயர்விற்காக உதவிய அனைவரையும் பாராட்டிப் பொன்விழா நடாத்தி எல்லோரது வாழ்த்துதலையும் பெறலாம்.

**வைரவிழா (மணிவிழா)**

அறுபது ஆண்டு நிறைவில் நடைபெறும் விழா வைரவிழா ஆகும். இதனை மணிவிழா என்றும் கூறுவர். முன்னர் குறிப்பிட்ட வெள்ளிவிழா, பொன்விழா போலல்லாது

மணியான விழா என்ற வகையில் இது மணிவிழா என்றாகிவிட்டிருக்கலாம். சிறந்த வற்றைக் குறிப்பிடும்போது மணியான பேச்சு, மணியான கருத்து, மணியான விளக்கம் என்று உயர்வைச் சுட்ட 'மணி' என்னுஞ் சொல் பயன்படுத்தப்படுவதைக் காணுகின்றோம். எனவே, விழாக்களுள் உயர்வான விழா எனச் சுட்டும் போக்கில் 'மணிவிழா" என்றனர் எனலாம்.

பிறந்த நாள் முதலாகக் கணக்கிட்டு அறுபதாவது நிறைவில் மணிவிழா கொண்டாடப்படுகின்றது. அரச நிர்வாக உத்தியோகத்தர் அறுபது வயது ஓய்விற்கு உரியதாம். அந்த வகையில், அதாவது தொடர்ந்து இருக்கும் ஏனைய உத்தி யோகத்தர்களால் அளிக்கப்படும் பிரிவுப சார விழா அறுபது ஆண்டு நிறைவு விழாவாகிவிடுகின்றது. இது அறுபது நிறைவில் எடுக்கப்படும் விழாதான். ஆகவே மணிவிழா என்ற திட்டத்துள் அடக்கப்படக்கூடியதுதான். அறுபது நிறைவு என்ற கருத்தே மணிவிழாவாகச் சிந்திக்க வைக்கின்றது.

பொன்விழாக் கொண்டாடிய மக்கள் பவள விழாவிற்கு இடையே மணிவிழா என்னும் வைரவிழாவைக் கொண்டாட வேண்டி ஏற்பட்டமைக்கு இந்த உத்தியோக ஓய்வு நிலைதான் காரணம் என்று சிந்திக்க மனம் உந்துகின்றது. ஆறி அமர்ந்து மனிதன் தன்னைப் பற்றிச் சிந்திக்க வாய்ப்பாக அமையும் காலம் இந்த மணிவிழாவுடன் தான் ஆரம்பமாகின்றது. மாடுண்டு கண்டுண்டு மக்களுண்டு என்று மகிழ்ந்தவற்றை எல்லாம் விடுத்து யாருடைய கட்டுப்பாட்டிற்கும் இடமின்றிச் சுயமான கட்டுப்பாட்டுடனாகி ஆன்ம ஈடேற்றத்திற்கான செயற்பாடுகளுடனோடு வாழவேண்டிய காலத்தின் ஆரம்பம் இந்த மணிவிழா ஆண்டின் தொடக்க நாள் என்று துணியலாம். எனவே, மணியான ஆண்டு என்ற சிந்தனையை இங்கும் பொருத்திப் பார்த்து வியக்க முடிகிறது.

**சஷ்டியப்த பூர்த்தி விழா :**

அறுபது ஆண்டு நிறைவிற் கொண்டா டப்படும் மற்றொரு வகை விழா சஷ்டியப்த பூர்த்தி விழாவாகும். அதாவது, திருமண மாகி அறுபது ஆண்டு நிறைவிற் கொண்டா டப்படுவதாகும். இவ் விழாவைக் கொண் டாடும் போது ஆண்மகனின் வயது எண்பதை அண்மியதாக இருக்கலாம். எனவே, பலர் இந்த விழாவைக் கொண்டா டக்கூடிய தகுதி பெறுவோராக இருக்க வாய்ப்பில்லை என்பதை உணரலாம்.

இந்தச் சஷ்டியப்த பூர்த்தி விழாவுடன் தொடர்புடைய மூத்த தம்பதியர் இரண் டாவது முறையாகவும் முழுமையான திருமணக் கிரியைகளுக்கு உள்ளாக வேண்டிய நிலைமை உண்டு. மணமகன் மணமகள் இருவரும் அறுகுடனாகிய பால் வைத்து நீராட்டப்படுவர். மணமகன் பட்டுடை அணிந்து கொள்வார். மணமகள் கூறை அணிவிக்கப்படுவார். பின்னர் இருவரும் மணவறையில் இருத்தப் படுவர். அவர்களுக்கு வேண்டியவர்கள் தோழன் தோழியராக நின்று உதவுவர். திருமணக் கிரியையை நடைமுறைப் படுத்தும் குரு நிறைந்த வயதுடையவ ராகவும், கிரியா விளக்கப் பூரணத்துவம் பொலியும் முகத்தினராகவும், எல்லோரை யுங் கவரும் சாந்தகுணத்தவராகவும் கிரியைகளை நடைமுறைப்படுத்துதலில் நிறைந்த கவனம் உள்ளவராகவும்

இருப்பதை விழா நடத்தும் நாம் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

*"நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை அன்றே ஒழிய விடல்"*

தொடர்ந்து திருமணக் கிரியைகளில் ஒன்றன்பின் ஒன்றாக நடைபெறும். மணமகனாற் புதிதாகச் செய்விக்கப்பெற்ற தாலி சபையினரின் வாழ்த்துதலுடன் உரிய போது அணிவிக்கப்படும். பின்னர் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகள் கூடி வாழ்த்துதல் அன்பளிப்பு வழங்கல் என்பனவும் நடைபெறும். தொடர்ந்து அனைவரும் ஒன்றாக அமர்ந்து விருந்துண்டு மகிழ்வர்.

முதலிலே திருமணம் நடந்தவேளை கட்டப்பட்ட தாலி மணமகள் கழுத்தில் மஞ்சள் கயிற்றில் தொங்கிக் கொண்டே இருக்க வேண்டும் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

எண்பது வயதாகும் வேளை அதே கணவன் மனைவியர் மீண்டும் திரு மணத்தைச் சந்திப்பது என்பது வாழ் வினில் இடம்பெறும் இனிமையான, உண்மையானதொரு மங்கல கருமந்தான் என உறுதியாகக் கூறலாம்.

**பவள விழா :**

வெள்ளிவிழா இருபத்தைந்தாவது வயது நிறைவில் கொண்டாடப்படுவது. பொன்விழா ஐம்பதாவது வயது நிறைவிற் கொண்டாடப்படுவது. அடுத்து வரும் இருபத்தைந்தாவது வயது நிறைவில் அதாவது எழுபத்தைந்தாவது வயது நிறைவிற் கொண்டாடப்படுவது பவள விழா. அரசினரின் கீழ் பணிபுரிந்தோ அல்லது சொந்தமாகத் தொழில் புரிந்தோ ஆறுதல் பெற்றுள்ள காலம். இந்தக் காலந்தான் பெரும் பயனுள்ள காலம் எனலாம். தமக்குத் தெரிந்தவற்றை தம் அறிவில் அனுபவத்திற் பட்ட கருத்துக்களை மற்றையோருக்கு வழங்கக்கூடிய காலம். அறிவு முதிர்ச்சி அனுபவ முதிர்ச்சி என்ப வற்றுடனாகி வரும் நல்ல கருத்துக்களை இளைய சமுதாயத்திற்குக் கொடுக்கக்கூடிய காலம். சமூகத்திற்குப் பெரும் பயன்பாடு டையவராக வாழக்கூடியதொரு காலம். இந்நிலையிலே தான் பவளவிழா எடுக்கப் படுகிறது.

இந்த நிலையிற் பவளவிழா எடுக்கப்படு வதற்கு முன் சம்பந்தப்பட்டவர் எவ்வள விற்குச் சமூகத்திற்குப் பயன்பட்டார் என்பது சிந்திக்கப்பட வேண்டும். மக்களின் வளர்ச்சிக்கு என்ன செய்தார் என்று சிந்திக்க வேண்டும். நாட்டின் உயர்விற்காக என்ன செய்தார் என்று கருத வேண்டும். அந்த வகை பயன்பாடுடையவராகி வாழ்ந்த ஒருவருக்கு எடுக்கப்படும் விழா எதிர் காலச் சிற்பிகளை மனங் குளிரவைக்கும். அவர்களை உற்சாகப்படுத்தும். நாட்டின் உயர்விற்கு இத்தகு விழாக்கள் பேருதவி அளிப்பனவாகும்.

**நூற்றாண்டு விழா :**

நூறாவது ஆண்டு நிறைவில் கொண்டா டப்படுவது நூற்றாண்டு விழா எனப்படும். குறிப்பிட்ட நிறுவனமோ சங்கமோ ஆரம்பித்து நூறு ஆண்டுக்ள நிறைவின் போது, அந்நிறுவனம், சங்கம் தொடக்க காலத்திலிருந்து இதுவரை காலமும் வளர்ச்சி பெற்று நிலைத்து நிற்றலை எண்ணியும் அதனை பலர் அறிந்து கொள்ளும் வண்ணமாகவும் மகிழ்ச்சி

யோடு கொண்டாடப்படும் விழா. இது அந்நிறுவனத்தின், சங்கத்தின் வரலாற்றில் மிக முக்கியமானதும் சிறப்புக் கொண்ட மைந்த நிகழ்வுமாகும்.

**சதாபிஷேகம் :**

பிறந்த நூறு ஆண்டுகள் வாழ்ந்த ஒருவருக்கு நடைபெறுவது இந்த விழா. சமூகத்திற்கு பயன்பாடுடையவராகி நூறு ஆண்டுகள் வாழ்ந்த ஒருவரை நாம் ஒவ்வொருவரும் நினைய வேண்டும். அவரை வாழ்த்த வேண்டும். அவ்வகை பலரது ஒன்றுபட்ட நினைவின் பிரதி பலிப்புத்தான் சதாபிஷேகம் என்று கொள்ளலாம்.

நூற்றாண்டினராய ஒருவர் அனுபவ முதிர்ச்சியில் முழுமை பெற்றவராகி இருக்கலாம் என்று நினைய வாய்ப்பி ருக்கிறது. அவர் அனுபவங்களை நாமும் அனுபவிக்க வாய்ப்புக் கிடைத்திருக்கும். அந்த நன்றியை நினைய வேண்டும். பெரியாரை வாழ்த்த வேண்டும். பல்லாண்டு எம்முடனாகி வாழ்ந்து எம்மை வழிப் படுத்துபவராகி ஒளிரவேண்டும் என்று நினைய வேண்டும்.

சதாபிஷேக நயாகரைப் பால் அறுகு வைத்து முழுகச் செய்து புனித ஆடை அணிந்து கொள்ளவைத்து, விபூதி தார ணராக்கி ஒரு கும்பத்தின் முன் இருக்கச் செய்து ஒரு குருவின் கிரியைகளுடனாக்க வேண்டும். விழா நாயகரையே இறை வனாகக் காணும் குரு இறைவனுக்குச் செய்வது போன்று அபிஷேக ஆராதனைகள் எல்லாம் செய்வார். உடன் நிற்பவர்கள் திருமுறைப் பாடல்களை ஓதி வாழ்த்துவர். நூற்றாண்டைச் சந்தித்தவர் தெய்வீக நிலையைக் கிட்டியவர் என்ற சிந்தனைக் குரியராதலை இந்தக் கிரியைகள் கொண்டு நினைய முடிகின்றது.

நூற்றாண்டு நிறைவுடனாகி வாழு பவர்கள் மிக மிகக் குறைந்த எண்ணிக்கை யினரே! அதனால் அதற்கு முன்பாகவே அந்த விழாவைக் கொண்டாடும் முறைமையும் உண்டு. ஆயிரம் பிறை கண்டவர் நூற்றாண்டு வாழ்வை அனுபவித்தவர் எனக் கண்டு எண்பது வயதின் பின்னே சதாபிஷேகத்தை அனுபவிக்கலாம் என இப்போ முடிவு செய்கின்றர். அதனால் எண்பது எண்பத் தைந்து வயதுகளில் இப்போ சதாபிஷேகம் செய்கின்றனர்.

## அக்னியின் பெருமை

ஹோமங்களில் வளர்க்கப்படும் அக்னியை சாதாரண நெருப்பாகக் கருதக்கூடாது. அக்னிதேவன் மற்ற தெய்வங்களின் தூதர் போலவும், அவர்களது வாய் போலவும் செயல்படுகிறார். மனிதன் மற்ற தெய்வங்களுடன் தொடர்பு கொண்டு பேச அக்னியைப் பயன்படுத்திக் கொள்கிறான். உணவும் அக்னி மூலமே கொடுக்கப்படுகிறது.

# திசை வழிபாடு

பிரபுசங்கர்

**திசைகள் ஒவ்வொன்றும் தனித்தனி சுபிட்சங்களை அருளுகின்றன.**

கிழக்கு – சகல ஐஸ்வர்யங்களையும் அள்ளி வழங்கும் திசை. சூரியன் உதிக்கும் திசை என்பதால் உயிர்கள் அனைத்துக்கும் புத்துணர்வு நல்கும் சக்தி வாய்ந்த திசை. சூரியோதயத்துக்கு முன்னால் துயிலெழுந்து, நீராடி, கிழக்கு நோக்கி அமர்ந்து தியானம் செய்து வந்தால் ஆன்ம பலம் பெருகும். சூரியோதயம் சராசரியாகக் காலை ஆறுமணிக்கு என்று வைத்துக் கொண்டால் அதற்கு முந்தைய சுமார் மூன்று மணி நேரங்கள் பிரம்ம முகூர்த்த நேரம் என்று அழைக்கப்படுகிறது. இந்த மூன்று மணி நேர ஆன்மபலப் பயிற்சி, வாழ்நாளில் ஒருவருடைய சம உணர்வு நிலைக்கு வழிவகுக்கும். சூரியோதயத்திற்குப் பிறகு உலகில் ஜீவராசிகள் விழித்துக் கொள்வதால், சந்தடி பெருகுவதால், தியான அலைகள் அவற்றோடு மோதுண்டு சிதைந்து திசைமாறிப் போக வாய்ப்பு உண்டு. ஆகவே தான் அதற்கும் முந்தைய அதிகாலைப் பொழுதில் அமைதி காக்கப்படும் பின்னிரவு நேரத்தில் மனம் ஆழ்ந்து தியானத்தில் ஈடுபடும். இந்நேரத்தில் துவக்கப்படும் எந்தச் செயலும் வலுப்பெறும், வெற்றி பெறும்.

தெற்கு திசையை எமதிசை என்கிறார்கள். எமன் தெற்கிலிருந்துதான் புறப்பட்டு வருகிறான் என்று நம்பப்படுகிறது. பூஜையறையிலோ அல்லது வேறு இடங்களிலோ கடவுள் படங்கள் மாட்டப்படுவதும், கடவுள் விக்கிரகங்கள் வைக்கப்படுவதும், கிழக்கு நோக்கியோ மேற்கு நோக்கியோ அல்லது வடக்கு நோக்கியே வைப்பதுதான் சிறப்பு என்பார்கள். அதாவது தெற்கு திசையிலிருந்து நேர் எதிரே வடக்கு திசையைப் பார்க்கும்படியாக படங்களும் விக்கிரகங்களும் அமைக்கப்படுவதால் அந்தத் தெற்கு திசையை நோக்கி நாம் வணங்குகிறோம். இதனால் தெற்குத் திசையிலிருந்து வரும் எமன் யோசிக்கிறான். நாம் கடவுள் படங்களை வணங்கும்போது, 'ஓகோ, இவன் பக்திமான், இவன் இன்னும் நீண்டகாலம் பூவுலகில் இருப்பது உலகிற்கு நன்மைதான் என்று யோசிக்கத் துவங்கிவிடுகிறான். அதுமட்டுமின்றி, அவ்வாறு வணங்கும் பக்திமான் தன்னையும் வணங்குவதாகவே அவன் கருதிக் கொண்டு, ஆசீர்வாதம் பண்ணவும் முன்வருகிறான்.

மேற்குத் திசை சூரியன் அஸ்தமனமாகும் திசை. காலை முதல் மாலை வரை இளம் வெய்யிலாய்த் துவங்கி, கடுமை பெற்று, உச்சமாய்க் காய்ந்து, மெல்ல மெல்ல உக்கிரம் தணிந்து இதமாய் மேற்குப் பகுதியில் போய் இறங்குகிறான் ஆதவன். வாழ்க்கை, சுகம், துக்கம் என்ற இருநிலைகளிலும் மாறிமாறி உழல்வதுதான் என்பதை சூரியன் உணர்த்துகிறது. இளஞ்சூடாக, கடும் வெப்பமாக மீண்டும் இளம் வெம்மையாக, மேற்கு திசை நோக்கி வணங்குவது, நம் வாழ்வின் சுக – துக்கங்கள், லாப – நஷ்டங்கள் எல்லாம் சரிசமமானதாக இருக்க வேண்டும் என்ற பக்குவத்திற்காகத்தான். சந்தோஷம் வரும்போது சிரிக்கவும், துக்கம் வரும் போது அழவும் தெரிந்திருக்க வேண்டிய

உணர்வு, மகிழ்ச்சியான நேரத்தில் மன அடக்கமும், துக்கமான நேரத்தில் மனத் தெம்பும் பெறவேண்டிய அனுபவம். இப்படி வாழ்க்கையை சமச்சீராக அமைத்துக் கொள்ள, அதற்குரிய மன தைரியத்தை அளிக்குமாறு மேற்குத் திசையை நோக்கி வணங்கி வழிபட வேண்டும்.

வடக்குத்திசை நம்மைவிட்டுப் பிரிந்த நம் முன்னோர்கள், பித்ருக்களாக மாறி வானுலகில் சஞ்சரித்துக் கொண்டு நமக்கு ஆசி வழங்கிக் கொண்டிருக்கும் திசை. அந்தத் திசையிலிருந்து தெற்குத்திசை பார்த்தாற் போல வீட்டு பூஜையறையில் கடவுள் படங்களை மாட்டுவதோ, விக்ர கங்கள் வைப்பதோ கூடாது என்றும் சொல்வார்கள். அதாவது மனிதராய் வாழ்ந்து மறைந்து விட்டவர்கள் குடி கொண்டிருக்கும் திசை என்பதால் அங்கி ருந்து நம்மை நோக்கும்படி, அவர் களுக்கும் மேம்பட்ட கடவுள்களின் படங்களை வைக்கக்கூடாது என்று சொல் வார்கள். இந்த வடக்குத் திசையிலிருந்து நம் முன்னோர்கள், நமக்குத் தெரிந்த தாத்தா பாட்டிமார்கள், தெரியாத கொள்ளுப்பாட்டி, கொள்ளுத் தாத்தா மார்கள் ஆகியோர் நம்மை ஆசீர்வதித்துக் கொண்டிருக்கிறார்கள். தன் வாரிசுகள், தனக்கு எத்தனையோ பரம்பரைக்குப் பின்னால் வந்தாலும் அவர்கள் நலமா யிருக்க வேண்டும் என்று விரும்புவது தான் முதியோர் பண்பு. அந்த வகையில் இந்தத் திசை நோக்கி நாடி வணங்குவது நாமும் நம் சந்ததியினரும் நன்மை பெறுவதற்காகவே.

## முக்கிய ஹோமங்கள்

ஹோமம் நடத்துவது ஏன்? காலம் மாறும்போது எல்லா துறைகளிலும் திருப்பங்கள் நிகழும். உலகில் இயற்கை சூழ்நிலைகள் மாறும். இவற்றிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள ஹோமங்களை நடத்தவேண்டும். இறைவன் ஹோமங்கள் மூலமாக நமது கோரிக்கையை அறிந்து கொள்கிறான். அக் கோரிக்கைகள் அக்னிகுண்டங்கள் மூலமாக இறைவனைச் சென்றடைடைவதாக நம்பிக்கை. எனவே தான் ஹோமம் நடத்தப்படுகிறது.

- கணபதி ஹோமம் (தடைகள் நீங்க)
- அவஹந்தி ஹோமம் (விவசாயம்)
- ஆயுஷ்ய ஹோமம் (குழந்தைகளுக்கு)
- மிருத்தியஞ்ச ஹோமம் (ஆயுள் விருத்தி)
- லட்சுமி ஹோமம் (செல்வவிருத்தி)
- வித்யா ஹோமம் (கல்வியில் மேன்மை)
- மங்கள சமஸ்கரண ஹோமம் (குழந்தைப் பாக்கியம்)
- கனகதாரா ஹோமம் (திறமையை வெளிப்படுத்த)
- அக்னியின் பெருமை

# சித்திரைப் புத்தாண்டில் பேணப்படும் பாரம்பரியங்கள்

**கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்**

பண்டிகைகள், விழாக்கள், கொண்டாட்டங்கள் என்பன மனித வாழ்க்கைக்குச் சுவையும், உறுதியும், வளமும், வனப்பும், அர்த்தமும், ஆன்மீகமும் அளித்து வருகின்றன. அவற்றில் பற்று வைப்பதும் பங்கு கொள்வதும் அறிவுடைமை ஆகும். மனிதர்கள் சமூக, கலாசார, பண்பாட்டு உணர்வு பெற்று செம்மையான வாழ்வினை, நல்ல வண்ணம் வாழ்வதற்கு அவை பெரிதும் உறுதுணையாக அமைகின்றன.

**பண்டிகைகள் மூடநம்பிக்கைகள் அல்ல**

பண்டிகைகள், விழாக்கள் என்பன பெரும்பாலும் சமயஞ் சார்ந்தவை. அவற்றின் உள்ளார்ந்த அர்த்தங்கள் விளங்கிக் கொள்ளாதோர் அவற்றை மூட நம்பிக்கைகள் எனக் கூறித் தள்ளி வைக்கின்றனர். கேலி கிண்டல்களும் செய்கின்றனர். நாம் என்ன பெரிய அறிவாளிகளா? நம்மால் விளங்கிக் கொள்ளமுடியவில்லையென்றால், அவற்றை மூடநம்பிக்கைள் என்று சொல்லி விடுவதா?

மூட நம்பிக்கைகள் என்று அவற்றைக் கொள்வதன் மூலம் நம் முன்னோர்கள் நமக்களித்த அரும்பெருஞ் செல்வங்களை உதறித்தள்ளி உதாசீனஞ் செய்தவர்கள் ஆவோம். பண்டிகைகள், விழாக்கள், பாரம்பரியங்கள் யாவும் எமது பண்பாடு கலாசாரத்தைத் துலக்கி நிற்பன. நாம் அதையிட்டுப் பெருமை கொள்ளவேண்டுமே தவிர, அவற்றைப் புறக்கணித்துச் சிறுமையை அடையக் கூடாது.

**பண்டிகைகள் வாழ்க்கையோடு இணைந்தவை**

பண்டிகைகள், விழாக்கள் என்பன காலம் காலமாக மக்கள் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து விட்டவை. அவற்றிலிருந்து ஒதுங்கிக் கொள்வதால் நாம் நாமாக வாழமுடியாத நிலை ஏற்பட்டு விடும். தனித்துவத்தை இழந்து தனித்துப் போவோம் அல்லது வேற்றுக் கலாசாரம் எம்மை சுவீகரித்துக் கொள்ளும் நிலை ஏற்பட்டுவிடும்.

பண்டிகைகள், பாரம்பரியங்கள், விழாக்கள் என்பன மக்கள் வாழுகின்ற பௌதிகச் சூழல், பருவகாலங்கள், செய்யுந் தொழில்கள், சமூக பொருளாதாரப் பின்புலம் ஆகியவற்றுடன் இணைந்தும், இசைந்தும், பொருந்தியுமே வளர்ந்து வருகின்றன. அவற்றில் காலத்தின் தேவை. கால உணர்வுக்கேற்ப சிற்சில மாற்றங்கள் நிகழ்ந்திருக்கலாம். ஒவ்வாதன கழிந்து போயிருக்கலாம். புதியன புகுந்துமிருக்கலாம். எனினும் பண்டிகைகளின் நீண்ட காலத் தொடர்ச்சிக்கும், நிலைபேற்றிற்கும், அவை மக்களை ஈர்த்துக் கொண்டமைக்கும், மக்கள் வாழ்க்கையோடு பிரிக்கமுடியாத அளவிற்கு அவை கலந்துவிட்டமையே காரணமாகும்.

மக்கட் கூட்டத்தினரின் கலாசார, பண்பாட்டுத் தனித்துவத்தினையும், சிறப்பினையும் இனங்காட்டி நிற்பதும் நம் முன்னோர் அளித்த அந்த அருஞ் செல்வங்களே. எனவே அவற்றை அறிந்து

கொள்வதும், அனுசரிப்பதும், பேணிப் பாதுகாத்து அடுத்த சந்ததியினருக்குக் கையளிப்பதும் நமது கடமையாகும்.

**சித்திரைப் புத்தாண்டு**

உலகின் மிகத் தொன்மையான இந்து கலாசாரம், காலம் பற்றி மிக நுணுகி ஆராய்ந்து அரிய முடிவுகளை எடுத்து நமக்கு வழங்கியுள்ளது. காலத்திற்கு முக்கியத்துவம் அளித்துள்ளது. காலத்தின் அருமை பெருமைகளை உணர்த்தியுள்ளது. காலம் போனால் போனதுதான். மறு முறை மீண்டும் வராது. எனவே காலம் பொன் னானது. காலச்சக்கரம் உருண்டு கொண்டே யிருக்கும். காலத்திற்கும் மனித வாழ் விற்கும் மிக நெருக்கமான தொடர்பு உண்டு. பிறப்பு, இளமை, முதுமை, மூப்பு, இறப்பு என்பன காலத்தால் நிர்ணயிக்கப் படுகின்றன. காலம் என்பது தொழில்கள் செய்வதற்கும் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய முக்கியத்துவத்தைப் பெற்றது மனிதனுக்கு இயலாத காரியங்களில் ஒன்று காலத்தை மாற்றுவது ஆகும். அதனால் காலமாற்றத்தோடு ஒத்துப் போவதைத் தவிர வேறு வழியில்லை.

காலத்தோடு முரண்படும் போதெல்லாம், வெற்றி மனிதன் பக்கம் இல்லை. அவலங் களும் துன்பங்களும், அழிவுகளும் தான் அப்போது அவன் சந்தித்தவை. காலத்தை வெல்லமுடியாது என்பதை உணர்ந்த மனிதன் காலத்திற்கு அடிபணிந்தான். காலம் வணக்கத்திற்குரியதாயிற்று.

காலத்திற்கும் சகுனமாக பிரத்தியட்ச மாகத் தெரிகின்ற சூரியனுக்கும் உள்ள தொடர்பு அறியப்பட்டதும், சூரியனே காலத்தை நிர்ணயிக்கின்றது என்று உணர்ந்தனர். பகல், இரவு, கோடை, மாரி மற்றும் வெப்ப தட்பங்கள் ஏற்படுவதற்குச் சூரியனே சூத்திரதாரி என உணரப்பட்டது. சூரியன் வழிபாட்டிற்கு உரியவனானான்.

சூரியனை முன்வைத்து ஆண்டுகள், மாதங்கள், நாள்கள், நாழிகைகள், விநாடிகள், தற்பரைகள் எனக் காலம் பகுக்கப்பட்டது.

சௌர வருஷம், சௌர மாதம் என்பன சூரியனோடு சம்பந்தப்பட்டவை. வரு ஷங்கள் பிரபவ முதல் அக்ஷய வரை அறுபது ஆகும். மாதங்கள் மேடம் முதல் மீனம் வரை பன்னிரண்டு ஆகும். அவற்றை முறையே சித்திரை முதல் பங்குனி வரையிலான மாதங்கள் எனக் குறிப்பிடு கின்றனர்.

சூரியன் மேடராசியில் பிரவேசிப்பது முதல் மீன ராசியைவிட்டு நீங்கும் வரையும் உள்ள காலப்பகுதி ஒரு வருஷம் ஆகும். ஒரு வருஷம் பன்னிரண்டு (கூறுகளாக) மாதங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. முதலாவது காலக் கூறு மேடராசி அல்லது சித்திரை மாதம் என்பர்.

சூரியன், சித்திரை மாதம் முதல் நாளன்று, மேடராசியில் பிரவேசிக்கிறார். அதனை மேட சங்கிராந்தி என்கின்றனர். இந்துக்கள் அத்தினத்தை வருடப்பிறப்புத் தினமாகக் கொண்டாடுகின்றனர்.

சித்திரைப் புத்தாண்டுத் தினம், இந்துக்கள் காலத்தை நுணுகி ஆராய்ந்து எடுத்த முடிவின் பேறாக ஏற்படுத்தப்பட்ட பண்டிகை ஆகும்.

இந்துமக்கள், சித்திரைப் புத்தாண்டுத் தினத்தை சமய ஆசாரப்படியும், பழைய பாரம்பரியங்கள், மரபுகள் ஆகியவற்றைப் பேணியும், சோதிட சம்பிரதாயங்களை அனுசரித்தும், சமூக உணர்வுகளை ஓம்பியும் கொண்டாடி வருகின்றனர்.

**சித்திரைப் புத்தாண்டும் சோதிடக் கலையும்**

ஆயகலைகள் அறுபத்து நான்கினுள் சோதிடக் கலையும் ஒன்று. இந்து மக்களின் வாழ்க்கையில் சோதிடத்தின் செல்வாக்கு மிக அதிகம். காலத்தையும் நேரத்தையும் கணித்து மக்களுக்கு உதவுவது சோதிடம். சோதிடத்தை கேட்டு அதன் ஆலோசனைப்படியே எல்லாக் கருமங்களிலும் காரியங்களிலும் ஈடுபாடு கொள்ளும் வழக்கம் இந்துக்களிடையே நெடுங்காலமாக இருந்து வருகிறது.

சித்திரைப் புத்தாண்டு பிறக்கும் நேரத்தை முன்கூட்டியே சோதிடம் கணித்துக் கூறி விடுகின்றது. குறித்த நேரத்தில் புத்தாண்டை வரவேற்க இல்லங்கள் தோறும் குத்துவிளக்கேற்றி நிறைகுடம் வைத்து, மகர தோரணங் களினால் அலங்கரித்து இந்துக்கள் காத்திருப்பார்கள். அந்த நேரத்தில் ஆல யங்களில் மணிகள் அடிக்கப்படும்.

ஒவ்வோர் ஆண்டிற்கும் வெவ்வேறு பெயர்கள் உண்டு. அப்பெயர்களைச் சோதி டம்தான் தந்துள்ளது. ஒரு சுற்றில் அறுபது ஆண்டுகள் உண்டு. இந்தப் புத்தாண்டு பிறந்த நேரத்தைக் கொண்டு கிரக நிலையை அமைத்து ஆண்டிற்குரிய பலா பலன்களைச் சோதிடம் கூறுகிறது. பலன்கள் நல்லனவாயும் உண்டு, தீயனவாயும் உண்டு.

புதுவருடம் பிறக்கும் நேரத்திற்கும் முன்னும் பின்னும் குறிப்பிட்ட ஒரு கால அளவு நேரம் விஷு புண்ணியகாலம் எனப்படும். இப்புண்ணிய காலத்தில் மருத்துநீர் சிரசில் தேய்த்து ஸ்நானம் செய்து கொள்வர். புனித தீர்த்தங்களில் நீராடுவதால் பல வினைகள் அழியும்.

குறிப்பிட்ட சில நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு சங்கிரம தோஷங்கள் உண்டு. அவற்றையும் சோதிடமே கணித்துச் சொல்கின்றது. தோஷமுள்ளவர்கள் தவறாது மருத்துநீர் தேய்த்து, புனித நீராடி, கடவுளை வழிபாடு செய்து, தானதரு மங்கள் புரிந்து, சங்கிரம தோஷத்தை நிவிர்த்தி செய்து கொள்வர்.

வருடம் பிறந்த பின்னர் செய்யப்படும் கருமங்கள் யாவும், அவை பழைய கருமங்களின் தொடர்ச்சியாக இருப்பினும் கூட, புதுக் கருமங்களாவே கருதப்பட்டு, நாள், நேரம், முகூர்த்தம் பார்த்து சுபவேளைகளிலேயே ஆரம்பிப்பது வழக்கம். பஞ்சாங்கம் சுபநேரங்களை அறியத் தருகிறது.

பஞ்சாங்கம் ஐந்து அங்கங்களைக் கொண்டுள்ளது. திதி, நாள், நட்சத்திரம், யோகம், கரணம் என்பனவே அந்த ஐந்து அங்கங்களுமாகும். இவை யாவும் நல்ல நிலையில் இருக்கும் வேளையைச் சுபநேரம் என்கின்றனர்.

**கைவிசேஷம்**

கைவிசேஷம், புதுவருடத்தில் இடம் பெறும் ஒரு முக்கிய நிகழ்ச்சி. பணம் கைமாறல் என்பது இதன் பொருள். வருடம் பிறந்த நேரம் தொடக்கம்

கைவிசேஷம் பெற்றுக் கொள்ளும் சுப வேளை வரை காசு, பணத்தைப் பரிமாற்றம் செய்வதில்லை. கையினால் தொடவும் மாட்டார்கள். கைவிசேஷத்திற்குரிய நல்ல நேரத்தைப் பஞ்சாங்கத்திலிருந்து அறிந்து கொள்வர்.

பொதுவாகக் குடும்பத் தலைவன், தலைவியிடமிருந்தே கைவிசேஷம் பெறுவது வழக்கம். வெற்றிலையில் சிறிது நெல் தானியம், மலர்கள், பாக்கு, பழம் என்பனவற்றை வைத்து, அவற்றின் மீது பணம் வைத்துக் கடவுளை நினைந்து, புதிய ஆண்டில் தனலாபம், தானிய லாபம், பொருள் லாபம் அனைத்தும் நிறையக் கிடைக்கவேண்டுமென மனதாரப் பிரார்த் தித்து, குடும்பத் தலைவன் கைவிசேஷம் வாங்கிக் கொண்ட பின்னர் தான் பணம் கொடுக்கல் வாங்கல் செய்யப்படும்.

கைவிசேஷத்தை பெரியார்கள், முதலாளிமார்கள், கைராசிக்காரர் எனக் கருதப்படுபவர்கள் ஆகியோரிடமிருந்தும் பெற்றுக் கொள்வர்.

**புதுக் கருமங்களுக்கு நாள் பார்த்தல்**

விருந்து உண்ணல் என்பது உறவினர், சுற்றத்தவர், நண்பர்கள் ஆகியோரை ஒரு நல்ல நாளில் வீட்டுக்கு அழைத்து விருந்து வைத்தல். தாம் போய் உறவினர் முதலி யோர் வீடுகளில் வருடம் பிறந்த பின் முதன் முதலாக உணவு உண்ணல் ஆகிய இரண்டையும் குறிக்கும். விருந்துக்கும் கடுமையான நாள், நேரம், திதி, யோகம், நட்சத்திரம் எல்லாம் பார்ப்பார்கள். வியாழன், செவ்வாய், ஞாயிறு ஆகிய நாட்களைத் தவிர்த்துக் கொள்வர். கள்ள வியாழன் கழுத்தை அறுக்கும் என்ற நம்பிக்கை எல்லோரிடமும் உண்டு. அட்டமி, நவமி, அமாவாசை போன்ற கனத்த நாள்களிலும், மரண யோகம், கரிநாள், இராகு காலம் உள்ள நேரங் களிலும் முதன் முதலாக விருந்துண்ண மாட்டார்கள். பானங்கள் தன்னிலும் அருந்த மாட்டார்கள். உறவினர், நண் பர்கள் வீடுகளுக்குள் செல்லவும் மாட் டார்கள். வருஷம் பிறந்து முன்னம் முன்னம் ஒவ்வாத நாளில் ஒருவர் வீட்டுக்குச் சென்றால், அங்கு உணவு உண்டால் நிச்சயம் அந்த ஆண்டில் ஏதோ விதத்தில் அவரோடு பகைக்க நேரிடும் என்னும் நம்பிக்கை ஆண்டாண்டு காலமாக மக்களிடையே இருந்து வருகிறது. இதற்குச் சான்றாகப் பல உண்மைச் சம்பவங்களை பெரியவர்கள் எடுத்தக் கூறுவர்.

உறவுக்குப் பங்கம் ஏற்பட்டுப் பிரிந்த வர்களைக் கூட்டி வைக்கும் காலமாகப் புத்தாண்டுப் பண்டிகைக் காலம் விளங்கு கின்றது. ஊர்ப் பெரியவர்கள், குடும்பப் பெரியவர்கள் முன்னின்று பிரிந்தவர் களைச் சேர்த்து வைப்பர். உறவு பலப் படுத்தல், உறவைப் புதுப்பித்தல், பகை மையைப் போக்கி புதிய உறவை ஏற் படுத்துதல் என்பவையெல்லாம் பண்டிகைக் கால நிகழ்வுகள். இந்த வகையில் சமூக முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் புது வருடப் பண்டிகை விளங்குகிறது.

மற்றெந்தக் காலங்களிலாவது உற வினர், சுற்றத்தினர், அயலவர், சம்பந்திகள் வீடுகளுக்குச் சென்று அளவளாவி, குசலம் விசாரித்து வராவிட்டாலும் கூட, புத் தாண்டுப் பண்டிகைக் காலத்தில் அத்தகை யவர்கள் வீட்டிற்குச் சென்று அவர்களைத் தரிசித்து, விருந்துண்டு வருவதை ஒரு

கண்டிப்பான கடப்பாடாகப் பேணி வருபவர்கள் இந்துக்கள்.

குரு ராஜ பிரவு தரிசனம், மாதா, பிதா, ஆசிரியர் தெய்வ தரிசனம் என்பனவும் புத்தாண்டில் செய்யப்படவேண்டியவை.

ஏர்மங்கலம், ஒரு சடங்காகவே நிகழ்த்துவர். புத்தாண்டில் முதன் முதலாக வயல், தோட்டங்களில் பிரவேசித்து, மாடுகளை ஏரில் பூட்டி நிலத்தை உழுதல் என்னும் கருமத்தை ஏர்மங்கலம் என்பர். அவ்வாறே வருடம் பிறந்த பின்னர் ஒரு சுபவேளையிலேயே, வியாபாரம் செய்தல், புதுக்கணக்குப் பதிதல், கொடுக்கல் வாங்கல் செய்தல் என்பனவற்றை நிகழ்த்தும் வழக்கம் இருந்து வருகிறது.

கமச்செய்கை தோட்டச் செய்கையிலோ, வியாபாரத்திலோ, மேற்கொள்ளப்படும் வேறெந்தத் தொழிலிலேயோ இந்த ஆண்டில் ஏற்படுகின்ற இலாப நட்டம், வரவு செலவு , பலிதம் பலிதமின்மை என்பன யாவும் புதுவருடம் பிறந்த பின்னர் முதன் முதலாக அத்தொழில்கள் தொடங்கப்பட்ட நேர, காலத்தைப் பொறுத்தே அதற்கேற்ப நிகழ்கின்றன என்பது இந்துக்களின் நம்பிக்கை. அதனாலேதான் தொழில்களைச் சுபவேளையில் தொடங்குவதும், கிரியைகள் சடங்குகள் என்பவற்றை சமய ரீதியாக மேற்கொள்வதும், தொழில் பலிதம், காரியசித்தி, வருவாய் மிகுதி என்பனவற்றிற்கு இன்றியமையாதனவென்று இந்து மக்கள் நம்பிக்கை கொள்கிறார்கள். நம்பினார் கெடுவதில்லை என்பதற்குப் பல சான்றாதாரங்களைக் காட்டுவார்கள். அவற்றில் நம்பிக்கையற்றவர்கள், நாள் நட்சத்திரம், சுபவேளை என்பவற்றைப் பாராமல் தன்னிச்சையாகத் தொழில்களைத் தொடங்கி, கருமங்களைப் புரிந்துபட்ட கஷ்ட நஷ்டங்களையெல்லாம் கதை கதையாகக் கூறுவார்கள்.

**புதுப்பொலிவு**

புத்தாண்டுத் தினத்தில் வாழ்க்கையில் ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பிப்பதாக எண்ணுகின்றார்கள். பழைய கோப தாபங்கள், பகைமைகள், வெறுப்புணர்வுகள் என்பவற்றை பழைய ஆண்டோடு விட்டு விடுவார்கள். புதிய ஆண்டு மலர்ந்ததுடன், நட்பு, அன்பு, நல்லெண்ணம், நல்லுறவு, நல்லிணக்கம் என்பனவும் தம் உறவினர், சுற்றத்தவரிடையெ மலர்ச்சி பெற வேண்டும் என்பது அவர்களின் விருப்பம். புத்தாண்டில் பீடைகள், துன்பங்கள், துயர்கள், பகைமைகள் யாவும் ஒழிக்கப் பட்டுவிடும் என்னும் நம்பிக்கையும் ஒளிவிடும். மனிதர்கள் தனித்து வாழ்வதில்லை. சேர்ந்து சமூகமாக வாழ்பவர்கள். எனவே சமூக உறவு, சமூகநீதி, சமூக உறுதி என்பற்றைப் பேணவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. கடன்பட்டிருந்தால், கூட பழைய ஆண்டு முடிவிற்குள் தீர்த்து விட்டுப் புத்தாண்டுத் தினத்தில் கலக்கமின்றிச் சுதந்திரமாக இருப்பர். கூடாத பழக்கங்களையும் விட்டுவிடுகின்றனர். புத்தாண்டில் புனிதம் பேணிப் பொலிவு பெறுகின்றனர்.

புத்தாண்டுக் காலங்களில் பல்வேறு சுதேச விளையாட்டுக்களில் ஈடுபடுவது வழக்கம். கூத்துக்கள், ஆடல் பாடல்கள், கும்மி மற்றும் கலை நிகழ்ச்சிகளிலும் மக்கள் ஈடுபடுவர். தொழில் நிமித்தமோ, வேறு காரணங்களை முன்னிட்டோ, பிற இடங்களில் சென்று இருப்பவர்களும்

கண்டிப்பாக சொந்த ஊருக்குப் புத்தாண்டுக் காலத்தில் திரும்பி விடுவார்கள். பிரிந் தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ? ஒரே கொண்டாட்டமும் குதூகலமும் தான். ஊரில் உள்ளவர்களும் அறுவடை முடிந்து ஓய்வாக இருப்பர். புத்தாண்டுக் காலம், குடும்பத்தினர் ஒன்றுகூடலுக்கும் உறவினருடன் ஒன்று சேர்தலுக்கும் உரிய காலமாகும். திருமணமாகியுள்ளவர் களுக்கு முதல் புத்தாண்டில் பல்வேறு உபசரிப்புகள் நடைபெறும்.

போர்த்தேங்காய் அடித்தலில் இளை ஞர்கள் ஆர்வம் காட்டுவர். இரண்டு குழுவினருக்கிடையே போட்டியாகவும் இதனை நடத்துவர். ஊஞ்சல் கட்டி ஆடும் வழக்கமும் உண்டு.

புத்தாண்டுக்கால விளையாட்டுக்கள், கலை கலாசார நிகழ்வுகள், சமயச் செயற்பாடுகள், விருந்தோம்பல், ஒன்று கூடல்கள் யாவுமே சமூக நோக்குடனும், சமூகத்தில் உறுதி, அமைதி, ஒற்றுமை, புரிந்துணர்வு பேணும் குறிக்கோளுடனும் ஒழுங்கு செய்யப்படுபவை. பொழுது போக்குகள் வெறும் கேளிக்கைகள் ஆகிவிடக்கூடாது. இந்து சமயம் அர்த்த முள்ள சமயம் என்பதை நினைவிற் கொள்ளவேண்டும்.

கடந்த ஆண்டில், துன்பநிகழ்வுகள் இடம்பெற்ற வீடுகளில், புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் நடைபெறுவதில்லை. அவர்களுக்கு உணவு, தின் பண்டங்கள் வழங்கி மகிழ்விப்பதில் அண்டை அயலவர்கள், சுற்றத்தினர் மிகவும் கண்ணும் கருத்துமாக இருப்பர்.

இளவேனில் காலம் தொடங்குவது சித்திரை மாதத்தில். மாமரங்கள் பூத்துக் குலுங்கும், வேப்பமரங்களிலும் பூக்கள் நிறைய இருக்கும். வாழ்க்கை என்பது முற்றிலும் இனிப்பானதோ அல்லது முற்றிலும் கசப்பானதோ அல்ல. இனிப்பும் கசப்பும், இன்பமும் துன்பமும் கலந்தது தான் வாழ்க்கை என்பதை இயற்கை உணர்த்துவதாக இது அமைகிறது. புத் தாண்டுத் தினத்தில் உணவோடு வேப்பம் பூ சம்பல் அல்லது வடகம் சேர்த்துக் கொள்வதும் வழக்கமாக உள்ளமை நோக்கற்பாலது.

புத்தாண்டுப் பண்டிகை தொடர்பாக நடைபெறும் நிகழ்ச்சிகள் சம்பிரதாயங் களாக எண்ணிவிடுதல் ஆகாது. அவை சமூக நோக்குடையவை. எமது பாரம் பரியங்கள், கலாசாரங்களை வெளிப் படுத்துபவை. எமது வாழ்க்கை சீரும் சிறப்புமாக அமைவதற்கும், வாழ்க்கையில் ஒரு பிடிப்பை ஏற்படுத்துவதற்கும், மனித உறவுகளைப் பலப்படுத்தி ஒரு பிணைப்பை உருவாக்குவதற்கும் பண்டிகைகள், விழாக்கள் என்பன மனித சமுதாயத் திற்குத் தேவையானவையே. புத்தாண்டு வாழ்த்துக்கள் மனித குலத்திற்கு அமைதி யையும் சாந்தியையும் தருகின்றன.

# தடுத்தாட் கொண்ட புராணத்தில் சமுதாய நிலை

**சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் அவர்கள்**

மனிதன் தலைமுறை தலைமுறையாக ஒரே பண்பாடு பழக்கவழக்கங்களைக் கொண்டவன் என்று கூற இயலாது. சமுதாய அமைப்பு எப்போதும் நிலையாக இருப்பதில்லை. காலந்தோறும் மாறிக் கொண்டேதானிருக்கும். ஆதலாற்றான், பெரிய புராணம் காட்டும் சமுதாயத்திற்கும் அதற்கு முந்திய, பிந்திய சமுதாயங்கட்கும் நிரம்ப வேறுபாடுகள் காணப்படுகின்றன. சமயமும் இறைபக்தியும் பெரியபுராணம் காட்டும் சமுதாயத்தில் உயர்ந்திருந்ததோடு உயிர் நாடியாகவும் விளங்கின.

பெரியபுராணம் சமய அடியார்களின் வரலாறுகளை மட்டும் உணர்த்தாமல் அக்காலச் சமுதாய நிலையையும் அழகுபட விளக்கிச் செல்கின்றது. அது காப்பிய அமைப்பிற்காக இலக்கிய நயங்களை வருணித்தாலும் கூட சமூக அமைப்பைத் தெளிவாகக் காட்டத் தவறவில்லை.

பல்வேறு நாடுகளையும் ஊர்களையும் குலங்களையம் சார்ந்த நாயன்மார்களது வாழ்வு கூறுவதால், அக்கால மக்களின் வாழ்க்கை நிலை, பழக்க வழக்கங்கள், உளப்பாங்கு, இன்னோரன்ன செய்திகள் பற்றி எடுத்தக் காட்டும் காலக்கண்ணாடியாகும் பெரிய புராணம் என விளக்குகிறார் ந.சுப்புலட்சுமி (பெரிய புராணத்தில் பெண்மை. ப. 58)

**சமயநிலை**

எல்லாச் சமயத்தவரும் இறைத் தொண்டு பூசனை முதலியவற்றைச் செய்வது இயற்கை. ஆனால் சைவ சமயத்தார் இறைவனுடைய அடியார்களின் துன்பத்தைத் துடைப்பதையே தம் கொள்கை எனக் கருதினர் என்பதைப் பெரிய புராணம் உணர்த்துகின்றது.

பெரியபுராணம் கூறும் சமுதாய மக்களுக்குள் சாதி வேற்றுமைகள் நிலவியிருந்த போழ்தும் பல சாதிகளைச் சேர்ந்த சமய அடியார்கள் இறைத்தொண்டு எனும் ஒரே பிரிவைச் சார்ந்தவர்கள் என்ற எண்ணத்தைக் கொண்டவர்கள் என உணர முடிகிறது.

அறத்திற்கு அருள் அடிப்படை என்பதே சைவ சமயக் கொள்கை என்பது புலனாகிறது. தயா மூல தன்மம் என்று அப்பர் அடிகள் குறிப்பிடுவது உன்னுதற்குரியது. பெரிய புராணத்தில் சமய உறவுகள் அடியவர் ஆண்டவர்க்கிடையேயும், அடியவர் அடியவர்க்கிடையேயும், ஆண்டவர் – அடியவர்க்கிடையேயும் பரவிக்கிடப்பதை காணமுடிகிறது.

சைவ சமயத்தைச் சேர்ந்தவர்கள் தம்மைத் தொண்டு செய்பவர்கள் என்றே கருதிப் பெருமைபட்டுக் கொண்டனர். இறைவனும் தன்னை வணங்குவதை விட தன் அடியார்களை வணங்குவதையே விரும்புகிறான். நடமாடும் கோயில்களாக

உள்ள மக்களுக்குச் செய்யும் தொண்டே மகேசுவரனுக்கு உகந்த தொண்டு என்பது அன்பு நெறியின் கோட்பாடாகக் கருதப் படுகிறது. இறைவன் தன் தோழன் நம்பி ஆரூரன் தன்னை வணங்கிய காலை, அடியார்களாகிய தில்லை வாழ் அந் தணர்களை அவன் பாடவேண்டுமெனப் பணித்தான். ஆரூரரும் திருத்தொண்டத் தொகையைப் பாடினார். எனவே இறைவன் தன் தொண்டர்களைப் பாடுவதையே விரும்பினான் என்றும், தொண்டர்களைப் பாடினாலே தன்னைப் பாடியதாகக் கருதினான் என்றும் உணர முடிக்கின்றன.

**சாதி :**

பெரிய புராணத்தில் பல்வேறு சாதி களும் சமயங்களும் குறிக்கப்படுகின்றன. ஆனால் வேற்றுமையை வளர்க்கப் பெரிய புராணம் விரும்பவில்லை. ஆதலாற்றான் பல்வேறு சாதி நாயன்மார்களைப் பெரிய புராணம் விளக்குகின்றது. இது அன்றைய சமுதாயக் கட்டுக்கோப்பை விளக்குவ தாகும். ஆயினும் அனைவரும் சமமே என்பதைப் பெரியபுராணம் கூற விரும்பு கிறது.

பெரியபுராணம் ‘உலகெலாம்’ எனத் தொடங்கி இடையிலும் ‘உலகெலாம்’ எனப்பாடி, இறுதியிலும் ‘உலகெலாம்’ என்றே உலகப் பொது நோக்குடன் முடிகிறது. பெரிய புராணத்தின் கண்ணோட்டத்தில் மனித குலமனைத்தும் ஒன்றே. யாவரும் கேளிர் என உணரமுடிகிறது. அது சாதியால் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என எண்ணாமல், ஒழுக்கத்தால், தொண்டால், இறைவழி பாட்டால் மனிதர்களை உயர்ந்தவர்கள் எனக் கருதலாம் என்கிறது.

சாதிப் பாகுபாடு இருந்ததைப் பெரிய புராணம் தெளிவாகவே நமக்குப் புலப் படுத்துகிறது. ஆனால் சாதிகளை வளர்க் கவோ வேரூன்றவோ அது விரும்ப வில்லை. நாயன்மார்கள் பல சாதிக்காரர் களாயினும், தமக்குள் சாதி பேதமற்ற ஒருமைப் பாட்டுணர்ச்சியைச் சமய அடிப்படையிலே கண்டனர் என்பதால் இதை அறியமுடிகிறது.

திரு.வி. கலியாண சுந்தரனார், “பெரிய புராணம் ஒரு பெரிய சீர்திருத்த நூல் என்பது எனது உள்ளக் கிடக்கை. சேக்கிழார் காலத்தில் சாதிப்பேய் பேராதிக்கம் பெற்றிருந்தது. அப்பேயை ஓட்டுவதற்கு.... கடவுளன்பு என்னும் பெயரால் அக்காலக் குறைபாடுகளைக் களைந்தார். ஆதிசைவ ராகிய வன்றொண்ட பெருந்தகையார் உருத்திரக்கணிகைக் குலத்திற்ரோன்றிய பரவையாரையும், வேளாள மரபிற் பிறந்த சங்கிலியாரையும் மணங்கொண்டதும், அந்தணர் பெருமானாகிய அப்பூதியடிகள் வேளாள குலத் திலகராகிய அப்பர் சுவாமிகளைக் குருவாகக் கொண்டதும்.... இத்தகைய சீர்திருத்த முறைகளால் தமிழ் நாட்டைச் செம்மை செய்த சேக்கிழார்... என்பது எனது கருத்து” (சைவத்திறவு. ப. 61–62) என்று பேசுகிறார்.

தடுத்தாட் கொண்ட புராணத்தில் மூன்று சாதிகள் காட்டப்படுகின்றன. அவை அந்தணர், அரசர், பதியிலார் என்பனவாம்.

**அரசர் :**

சுந்தரர் அந்தணர் குலத்தில் பிறந்தவர். குழந்தைப் பேறு இல்லாத நாட்டின் அரசர் நரசிங்க முனையர், தெருவில் விளையாடிக் கொண்டிருந்த சுந்தரரைக் கண்டு அவரை

வாரிசாக்க நினைத்தார். சுந்தரரை வளர்ப்புப் பிள்ளையாக எடுத்து வளர்த்த நரசிங்க முனையரையர், சுந்தரர்க்குத் தன் குலத்தில் பெண் பார்க்கவில்லை. சுந்தரர் குலத்தைச் சேர்ந்த புத்தூர்ச் சடங்கவி சிவாச்சாரியார் மகளைச் சுந்தரர் மணம் முடிக்க நரசிங்க முனையரையர் மறுக்க வில்லை என்பது சிந்திக்கத் தக்கது. பெரியபுராணத்தில் இடம்பெறும் அரச சாதியினர், தாம் வளர்த்த பிள்ளைகட்டுத் தம் அரச சாதியிலேயே திருமண உறவு பூணவேண்டுமென வலியுறுத்தவில்லை.

**அந்தணர் :**

பிராமணர்களுள் ஒரு பிரிவினர் சிவபிராமணர் என்றும், ஆதி சைவர் என்றும் அழைக்கப்படலாயினர். இவர்கள் பெரிய புராணத்துள் சிவ மறையோர் (4127) எனக் குறிக்கப்படுகின்றனர். இக்குலத்தைச் சேர்ந்தவர்கள் இசை ஞானியார், சடையனார், சுந்தரர், புகழ்த் துணை நாயனார் ஆகிய நால்வராவர்.

**பதியிலார் :**

சங்க காலம் முதல் பெரியபுராண காலம் வரை கணிகையர் குலம் தொடர்ந்தது. இப்பதியிலார் குலத்திலும் பண்புடைய பெண்டிர் உண்டு என்பதையும் அவர்களும் திருமணம் புரிந்து, கற்பொழுக்க வாழ்க்கை நடத்தி வந்துள்ளனர் என்பதையும் பரவை யார் வரலாற்றிருந்து உணரமுடிகிறது.

பதியிலார் குலத்தில் பிறந்தவர் தான் பரவையார். அவர் சிவனடியார் மீது மரியாதை காட்டியும், சிவபெருமானுக்குத் தொண்டு செய்தும் வாழ்ந்து வந்தார். ஒருநாள் திருவாரூர்ப் பெருமானை வழிபடவந்த பரவையார் சுந்தரரைக் கண்டு விரும்பி மணம் செய்து கொண்டார். பரவையார் கணிகையர் குலத்தில் பிறந்தவரானாலும், பிற ஆடவர்களை மனத்தாலும் எண்ணாமல் சிறந்த கற் பொழுக்க நெறி நின்றார். எனவே பதியிலார் குலத்தார்க்கும் பதி உண்டு என்றும் அவர்களைப் பதியுளர் என்றும் அழைக்க முடியும் என்பதைப் பெரிய புராணம் வெளிப்படுத்துகிறது. நம்பியா ரூரராகிய அந்தணரையும் பரவையா ராகிய பதியிலார் குலத்தவரையும் ஓர் இனத்தவராக ஆக்கிவிட்டது. இறைவன் அடியார்களுள் சாதி பேதம் இல்லை. இதனின்றும் கலப்பு மணம் என்று இன்று புரட்சிகரமாகப் பேசப்படுவது பெரிய புராணத்திலேயே உண்டு என்பது தெளிவு.

பெரிய புராணம் 19 வகைச் சாதிகளைச் சிறப்பாகவும் பிறவற்றைக் குறிப்பாகவும் விளக்குகிறது எனினும் பெரிய புராணம் காட்டும் சமுதாயம் சாதி வேற்றுமை பாராட்ட விழையவில்லை. அவரவர் தொழிலுக்கு ஏற்பச் சாதிப் பிரிவுகள் தோன்றி வளர்ந்ததையே விளக்குகிறது.

**சடங்குகள் :**

காரணத்தை அறிந்தும் அறியாமலும் செய்யப்படும் நிகழ்ச்சிகளைச் சடங்குகள் என்பர். இவற்றைச் செய்தால் மன நிறைவு கிட்டும் என முழுமையாக நம்பினர். ஆகவேதான் சமுதாயத்தில் சடங்குகள் இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளன. இவை பெரிய புராணம் காட்டும் சமூகத்தில் மிகுதியும் போற்றப் பட்டன. பெரிய புராண சமுதாயத்தில் ஒருவரையொருவர் பார்த்தவுடன் வணக்கம் செலுத்திக் கொள்வதை ஒரு சடங்காகவே பின்பற்றினர்.

### பெயர் சூட்டல்

சிவபெருமானின் அருளினால் பிறந்த குழந்தைக்கு நம்பி ஆரூரர் எனப் பெயர் சூட்டப்பட்டது. அவர் ஐம்படைத்தாலி, சதங்கை, மணிகள் கோக்கப்பெற்ற சுட்டி, செம்பொன்னாற் செய்த அரைஞாண் முதலியன அணியப் பெற்றுத் தெருவில் சிறுதேர் உருட்டி விளையாடினார். திருஞான சம்பந்தரின் பெயரிடும் சடங்கு, நன்னாளில் செய்யப்பட்டது.

### பூணூல் அணிதல்

நம்பி ஆரூரர் மன்னர் நரசிங்க முனையரின் வளர்ப்பு மகனாக வளர்ந்தார். ஆயினும் சைவ அந்தணர் மரபிற் பிறந்த ஆரூரர்க்கு முந்நூல் என்னும் பூணூல் அணியும் சடங்கு செய்யப்பட்டது. காப்புக் கட்டுதல்.

### காப்புக் கட்டுதல்

எடுத்த காரியம் நிறைவேறுவதற்காகக் காப்புக் கட்டுதல் அந்நாளில் ஒரு சடங்காக இருந்தது. பெரியோர் திருமணத்திற்கு முந்திய நாளில் நம்பி ஆரூரர்க்குப் பசும்பொற் காப்பு அணிவித்தனர்.

### திருமணச் சடங்கு

சுந்தரர் மணப்பருவம் அடைந்த பொழுது அவர் தந்தை தன் குலத்தைச் சார்ந்த புத்தூர்ச் சடங்கவி மறையோன் மகளைப் பெண் கேட்டு முதியவர்களை அனுப்பினார். அறிவிற் சிறந்த பெரியோர்களிடம் சடங்கவி பெண் கொடுக்க அன்போடு இசைந்தார். மாப்பிள்ளை வீட்டார், பெண் வீட்டார் சம்மதத்தையறிந்த பின் மண நாளைக் குறித்துப் பெண் வீட்டார்க்கு ஓலையனுப்பினர்.

மங்கல மணவோலையை மங்கல மங்கையரும் ஆடவரும் மணமகள் இல்லத்திற்கு ஏந்திச் சென்றனர். பெண் வீட்டில் மங்கலப் பெண்டிரும் ஆடவரும் எதிர்கொண்டு பணிந்து அவ்வோலையை ஏற்றனர். மணமகள் வீட்டார் மகிழ்ச்சியடைந்து மணச் செய்தியை எல்லார்க்கும் அறிவித்து மங்கல வினைகளைச் செய்து, பூமாலை பந்தரிட்டு, முளைப்பாலிகைகளை இட்டார். மணமகளை வாழ்த்தி மணத்திற்கு முந்திய நாளில் மணமகள் வீட்டில் காப்பணிவித்தனர்.

மணமகன் சுந்தரர் மணப்பெண் ஊராகிய திரு நல்லூர்க்குத் திருமணம் செய்யச் சென்றார். சுந்தரர் தன் குலப் பெண்ணை மணக்க சடங்கவியின் ஊராகிய புத்தூர்க்குச் சென்றார். சுந்தரர் பரவையை அவர் ஊராகிய திருவாரூரில் மணந்தார். சங்கிலியாரையும் அவர் ஊராகிய திருவொற்றியூரிலேயே மணந்தார். எனவே பெரியபுராணம் காட்டும் சமுதாயத்தில் பெரும்பாலும் திருமணம் பெண் வீட்டில் நடந்தது எனத் தெரிகிறது.

சுந்தரரின் திருமணத்திற்கு மாப்பிள்ளை வீட்டிலிருந்து மறையோரும் பெண்டிரும் நிறைகுடம், தூபம், விளக்கு முளைப்பாலிகைகளை ஏந்தியும், மலர், அறுகம்புல், சுண்ணப்பொடி, பொரி முதலியவற்றை வீசியும், சந்தனம் கலந்த பனிநீரைத் தெளித்துக் கொண்டும் வந்தனர். அவர்களைப் பெண் வீட்டில் மறையவரும் பெண்டிரும் எதிர்கொண்டு வரவேற்றனர். இதனின்றும் அன்றைய சமுதாயத்தில், மணவிழாவிற்கு மங்கலப் பொருள்களைக் கொண்டு சென்றனர் என்பதும், அவர்களை மணமக்கள் வீட்டார்

வரவேற்றனர் என்பதும் உணரக் கிடக் கின்றது.

சுந்தரர் மாப்பிள்ளைக் கோலத்தில் குதிரையில் வந்து மணப்பந்தர் முன் இறங்கினார். அப்போது வெண் சங்கங்கள் ஒலித்தன. திருமணத்திற்கு முன் சுந்த ரரைப் பொன் அரியாசனத்தில் அமர்த்தி நெய்ப்புகையூட்டிய பாத்திரத்தில் மணப் பொருள்களையும் மலர்களையும் இட்ட தூய நீரை நிரப்பிக் குளிப்பாட்டினர். குளித்தபின் கத்தூரி, மஞ்சள் கலந்த வாசனைத் தூளைப் பூசி அழகு செய்தனர்.

சுந்தரர் திருமணத்தில் தூய, நறிய, பச்சைக் கற்பூரச் சுண்ணத்தோடு பனிநீர் கூட்டிச் செய்த சந்தனக் குழம்பையும் கத்தூரிக் கலவையையும் பூசி, பூணூலை அணிவித்தனர். பவித்திரம் என்னும் தருப்பை முடியைக் கையில் அணி வித்தனர். சுந்தரரின் திருமணத்தில் பல இயங்கள் முழங்கின. வாழத்தொலி எங்கும் பெருகிற்று. பெண்டிர் பல்லாண்டு, பாடி வாழ்த்தினர். வேத ஒலி மேலெழுந்தது. சுற்றத்தாரனைவரும் தத்தம் ஊர்திகளில் ஏறி மணவிழாக் காணக் கூடினர்.

சுந்தரர், அந்தணர் குலத்தில பிறந்தவ ரானாலும் கணிகையர் குலத்தில் பிறந்த பரவையாரையும் வேளாளர் குலச்சங்கிலி யாரையும் திருமணம் செய்து கொண்டார். இதனின்றும் அன்றைய சமுதாயத்தில் கலப்பு மணம் இருந்ததையும் இரு மனைவியரை ஓராடவன் திருமணம் செய்ததைரயும் அறிய முடிகிறது.

**சமூகப் பழக்கவழக்கங்கள்**

**அடிமை முறை :**

சுந்தரர் புத்தூர்ச் சடங்கவி சிவாச்சாரி யாரின் மகளைத் திருமணம் செய்ய விருந்தபோது இறைவன் சுந்தரரைத் தடுத்தார். முதிய அந்தணர் வடிவில் வந்த இறவைன், தமக்கும் சுந்தரர்க்கும் ஏற்பட்ட வழக்கை முடித்துத் திருமணஞ் செய்யு மாறு கூறினார். சுந்தரர், வழக்கு யாதென்று கேட்க, வேதியர் வடிவில் வந்த இறவைன் மறையோர்களிடம் நாவலூர் ஆரூரன் தமக்கு அடிமையாவான் என்பதே தம் வழக்கென்றார். இதனின்றும் பெரிய புராணம் காட்டும் சமுதாயத்தில் அடிமை என்று ஓலை எழுதிக் கொடுக்கும் வழக்கம் இருந்ததென அறியமுடிகிறது.

**வழக்குமுறை**

சுந்தரர், தம்மீது வழக்குத் தொடுத்த வேதியரைப் பழைய மன்றாடு என்ற ழைத்தார் என்பதும், வழக்காடியவரின் ஊரிலேயே வழக்கு ஆராயப்பட்ட தென்பதும், மூல ஆவணங்கட்குப் படிகள் இருந்தன என்பதும் உணரக்கிடக்கின்றன. வேதியர், திருவெண்ணெய் நல்லூர் ஊர்ப் பேரவை முன்பாகச் சுந்தரர் மீது வழக்கைத் தொடர்ந்தார். சுந்தரர் ஊரவையினரை 'அனதைத்து நாலுணர்ந்தீர் என்று விளித்துத் தாம் அடிமையல்லர் என மறுத்தார். அவையோர் வேதியாிடம் சுந்தரர் அடிமை என்பதை நிறுவுமாறு கூறினர். அவ்வாறு நிறுவுவதற்கு ஆட்சி, ஆவணம், அயலவர்களின் சாட்சி என்ற மூன்று சான்றுகளுள் ஒன்றைக் காட்ட வேண்டும் என்றனர். வேதியர் மூல ஓலையைச் சான்றாக அறிவித்தார். முன்பு சுந்தரர் படி ஓலையகைக் கிழித்தது போலச் செய்ய மாட்டாரென வாக்களிப்பின் அதனைக் காண்பிப்பதாகக் கூறினார். அவையோர் சரியென்றதால் மூல

ஓலையை வேதியர் காண்பித்தார். கரணத்தான் அதை வாங்கிப் படித்தான்.

மறையவர் வாழும் திருநாவலூரில் ஆதிசைவ ஆரூரன் எழுதிய செய்தி யாவது, பெரிய முனிவனாகிய திரு வெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக்கு யானும் என்பால் வரும் முறை மரபு ளோரும் வழித்தொண்டு செய்தற்கு ஓலை; மனம், செய்கை இரண்டாலும் இசைந்து எழுதிக் கொடுத்துள்ளேன் என்பதற்கு என் எழுத்து என்று ஓலையில் குறிக்கப்பட்டிருந்தது. அதைக் கேட்ட அவையோர் சாட்சிகளின் கையெழுத்தை யும் பார்த்து அவை சரியா என்று ஆய்ந்து பார்த்தனர். சுந்தரரிடம் அவர் பாட்ட னாரின் கையெழுத்தைப் பார்த்து அறியு மாறு கூறினார். சுந்தரரின் பாட்டன் கையெழுத்தைச் சுந்தரர் அறிய முடியா தென்ற வேதியர், சுந்தரர் பாட்டனின் வேறு எழுதுகைச் சாத்துண்டாகில், அதை வைத்து ஒப்பிட்டுப் பார்த்துச் சரியாக இருந்தால், சுந்தரர் தோற்றுவிட்டதாகவும், அவர் வேதியர்க்கு ஏவல் செய்ய வேண் டியது கடமை என்றும் தீர்ப்பளித்தனர்.

பெரியபுராணம் காட்டும் சமுதாயத்தில் வழக்குகள் ஊரவைகளால் தீர்க்கப்பட்டன. வழக்கை ஆய்ந்த அவையினர் வேதபாரகர் என்றும் அனைத்து நூலுணர்ந்தீர் என்றும் அறிவீர் என்றும் விளிக்கப்பட்டனர். உலக வழக்கு, ஆவணம் என்ற பத்திரம், நேரில் கண்ட சாட்சி என்னும் மூன்றா தாரங்கள் பயன்பட்டன. பத்திரத்தில் எழுதியவரின் ஊர், பெயர், குலம் முதலியன குறிக்கப்பட்டுக் கையொப்ப மிடப்பட்டிருந்தது. வழக்குத் தொடுப்போர், வழக்கு மறுப்போர் ஆகிய வர்களின் வாக்கு மூலங்களைக் கேட்டபிறகு, கையொப்பம் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்ட பின்பே தீர்ப்பளிக்கப்பட்டதென்பதும் உணரக் கிடக்கின்றன. எனவே, பெரிய புராணம் காட்டும் சமுதாயத்தில் சிறந்த நீதி நிர்வாகம், நீதிமன்ற நடவடிக்கைகள் ஓங்கியிருந்தன என அறியமுடிகிறது.

திருத்தொண்டர் புராணத்திலிருந்து இறைவன் புகழ் பாடுவதோடு தொண்டர் புகழ் பாடியமையையும் அதைச் சமய நெறியாகக் கொண்டமையையும் அறிய முடிகிறது. அந்தணர், அரசர், பதியிலார் முதலிய சாதியினரைப் பற்றி அறிய முடி கிறது. சாதியினால் வேறுபடினும் இறைத் தொண்டில் ஒன்றுபட்டனர். இப்புராணத்தி லிருந்து பெயர் சூட்டல், பூணூல் அணிதல், திருமணச் சடங்கு ஆகியவற்றை அறிய முடிகிறது. சோழர் காலத்தில் அடிமை முறை இருந்தது. நீதிமுறையும் சிறப்பாக அமைந் திருந்தது.


## கனகதாரா ஹோமம்

### (திறமையை வெளிப்படுத்த)

ஒரு மனிதனின் வெற்றிக்கு மூல காரணமாக இருப்பதே அவனது திறமைதான். ஆனால், சிலர் இதை உள்ளடக்கி வைத்திருப்பார்கள். கனகதாரா ஹோமம் பரம ஏழையைக் கூட செல்வந்தன் ஆக்கிவிடும் வகையில் அவனுக்குள் புதைந்து கிடக்கும் திறமையை வெளிக்கொண்டுவரும் சக்தியுடையது.

# அபிஷேக விளக்கம்

**அபிஷேகம்**

அபிஷேககலசத்தை இடைக்கையில் ஏந்தி அதன் வாயிலே வலக்கையை வைத்து அக்கலசத்தினின்றும் கீழ் நோக்கி விழுகின்ற திருமஞ்சனத்தைச் சங்க முத்திரையினால் அபிஷேகஞ் செய்க. நாலங்குலவுயரத்தினின்றும் பசுவினது நுனிக்கொம்பின் பருமை போலச் சிறுக விழுங் சலத்தைப் பரார்த்தலிங்கத்தில் அபிஷேகஞ் செய்க. ஆன்மார்த்தலிங் கத்தினிலெனில்; முன்கூறியதிற் பாதி பருமையும் இரண்டங்குலவுயரம் கொள்க. ஒவ்வொரு திரவியத்துக்குமிடையே தூபாதி கொடுத்து அபிஷேகஞ் செய்க.

**ஏந்தியபி டேககல சலத்தை யிடக்கரத்தில்**
**வாய்ந்தவலக் கையதன்மேல் வைத்து.**
**சங்கென்னு முத்திரையாற் றாழ்ந்தொழுகுந் தண்புனலாட்**
**டெங்களிறை தங்கிலிங்கத் தின்**
**ஆன்கோட்டு மாத்திரத்தி னாலங் குலவுயரத்**
**தான்விழுநீ ராட்டுகலிங் கத்து**

அபிஷேகஞ் செய்து கவசத்தால் திரு வொற்றாடை சாத்தி, மூலத்தாற் புஷ்பஞ் சாத்திச் சிவமந்திரமுச் சரித்துப் பத்மா சனத்தில் உடையவரை எழுந்தருளச் செய்க. இதனை அம்சுமானாகமம் முதலிய வற்றாலறிக.

**சைவ சமயநெறி**

**பத்தியினா லாட்டிடுக சங்குளூறும் பாணியினை**
**வத்திரத்தான் மேலீர மாற்று.**

**எழுந்தருளப் பண்ணிடுக பீடத் திலிங்கம்**
**விழைந்துகம லாதனத்தின் மீது.**

வடித்தெடுத்தநீர் கங்காசலத்துக்குச் சமானமாகையால் நீரை வடித்தெடுத்து, அதில் வாசனைத் திரவியங்களையும் புஷ்பங்களையுமிட்டு "அருளெனும் புனலினையாட்டி" எனக் காசி காண்டத்திற் கூறியபடி திருவருளாகிய ஞானமே நீரெனப் பாவித்து, அபிஷேகஞ் செய்யின் மல நிவாரணமாகும்.

**சதாசிவ ரூபம்**

**நிகழ்மல சுத்தி நிமித்த மாக**
**மகிழ்வுட னேதிரு மஞ்ச னம்பண்ணி**

**திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்**
**பண் – தக்கராகம்**

**தடங்கொண்ட தொர்தா மரைப்பொன் முடிதன்மேற்**
**குடங்கொண் டடியார் குளிர்நீர்சுமந் தாட்டப்**
**படங்கொண்ட தோர்பாம்பரை யார்த்தபரம**
**னிடங்கொண் டிருந்தான் றனிடை மருதீதே.**

நல்லெண்ணெய், மாக்காப்பு, நெல்லி முள்ளி முதலியவை பஞ்சகவ்வியம், பஞ்சாமிர்தம், பால், தயிர், நெய், தேன், கருப்பஞ்சாறு, பழவர்க்கம், இளநீர், சுகந்த சந்தனம், தாராபிஷேகம், சங்காபிஷேகம் என்பவற்றை முறையாகச் செய்ய வேண்டும் என்று சித்தாந்தரத்நாகரத்தில் அபிஷேகத் திரவியங்கள் சொல்லப்பட்டன.

எண்ணெய், மாக்காப்பு முதலிய மூன்று பஞ்ச கவ்வியம், பஞ்சாமிர்தம், நெய், பால், தயிர், தேன், கருப்பஞ்சாறு, பஞ்சபழம், பஞ்சரசம், இளநீர், அன்னம், விபூதி, சந்தனம், கும்பஜலம், அருக்கிய தீர்த்தம் என்னும் இவைகளால் அபிஷேகம்

செய்ய வேண்டும் என்று சிந்தாந்த சேகரத்தில் கூறப்பட்டிருக்கிறது.

கந்ததைலம், பஞ்சகவ்வியம், மா, நெல்லிமுள்ளி, மஞ்சள்மா, பஞ்சாமிர்தம், பால், தயிர், நெய், தேன், கருப்பஞ்சாறு, பழரசம், இளநீர், அன்னாபிஷேகம், சந்தனம், ஸ்நபனம் என அபிஷேகக் கிரமத்தைச் சகலாகமசங்கிரகம் செப்புகின்றது.

**சைவ சமய நெறி**

***அபிடேக வேதிகையில் வைத்தபிடே கஞ்செய்***
***யபிடேக மங்கையிலா கா.***
***ஆட்டிடுக கந்த தயில முதலதன்பி***
***னாட்டுகவா னைந்தினையு மார்ந்து.***

***பஞ்சாமிர் தம்பா லதன்பின் றதிநெய்தே***
***னெஞ்சாக் கரும்பினிர தம்.***
***கனியுதகந் தெங்கிளநீர் கந்தநீர் கும்பந்***
***தனில் விதியாற் றாபித்த நீர்.***
***என்னு மிவையு மினியபத மந்திரத்தைப்***
***பன்னியுரைத் தாட்டுகபாங் கால்.***

**எண்ணெய்க் காப்புவிதி**

எள்ளைச் சுத்தமாக்கிக் கைச்செக்கி னாலாட்டிச் சாத்துக. இங்ஙனமன்றி ஆட்டிய எண்ணெய் மதுவுக் கொப்பாகுமென்று காமிகம் கூறும்.

படிகலிங்கத்தக்கு எண்ணெய் உரித் தன்று; பசு நெய்யே உரித்தென்றறிந்து அபிஷேகம் பண்ணுக. படிகலிங்கத்திலே எண்ணையைக் கூர்ச்சத்தினாற் புரோ க்ஷிக்க வேண்டும்.

**சைவசமய நெறி**

***பாங்கல்ல வெண்ணெய் படிகத்தி னுக்காநெய்***
***பாங்கென்றே யாட்டுகவன் பால்***
***பரிவுறவெண் ணெய்யைப் புரோக்கிப்படி கத்தில்***
***வரமுறுகூர்ச் சத்தான் மதித்து.***

மண்ணிலிங்கத்தினுக்கும் பித்திசித்தி ரத்துக்கும் கண்ணாடியில் அபிஷேகிக்க வேண்டும். லோகசலிங்கத்துக்கு கூர்ச் சத்தினாற் புரோக்ஷிக்க வேண்டுமெனக் காரணாகமம் செப்பும்.

**பஞ்சகவ்வியவிதி**

பஞ்சகவ்வியம் என்னும் மொழியில் ப என்பது பாப நிவாரணமும், ச என்பது ஆன்மசுத்தியும், க என்பது பிறவி நீக்கமும், வியம் என்பது மோக்ஷமுமாம். ஆகவே, மலத்தை நீக்கி ஆன்மாவைச் சுத்தனாக்கிப் பிறவியை யொழித்து மோக்ஷத்தைக் கொடுக்கையால் பஞ்சகவ்வியமெனப் பெயராயிற்று என உணர்க. பஞ்சகவ்வியம் இல்லாமற் செய்யும் கிரியைகளில் தேவர்கள் சாந்நித்தியமாகார்கள்.

பஞ்சகவ்வியமாவன விதிப்படி கூட்டி அமைக்கப்பட்ட பால், தயிர், நெய், கோசலம், கோமயம் என்பனவாம்.

சிவலோகத்திற் சிவசந்நிதானத்தி லிருக்கின்ற இடப தேவரின் பக்கத்தி லிருக்கும் சிவப்பு நிறமுள்ள சுமனை, வெண்மை நிறமுள் சுரபி, கபிலைநிறமுள்ள நந்தை, புகை நிறமுள்ள சுசீலை, கருமை நிறமுள்ள சுபத்திரை என்னும் பசுக்களைச் சிவபெருமான் ஆன்மாக்கள் உய்யும் காரண மாய்ப் பூமியிற் பிறக்கும்படி கட்டளை செய்தருளினார். அவை பாற்கடலினின்றும் சிவபூசை யாகாதி கன்மங்களுக்கு உப யோகமாதற் பொருட்டும் ஆன்மாக்களுடைய துன்பங்களை நீக்கியருளுதற் பொருட்டும். உற்பவித்தன. இவைகளில் பால், தயிர், நெய்,

கோசலம், கோமயம் என்னும் பொருள்கள் தோற்றின.

**பால்**

ஒன்பது கோஷ்டம் அமைத்து, நடுக் கோட்டத்தில் சிவதத்துவத்தால் அமைக்கப் பட்ட இடத்தின் மீதாகத் தாபிக்கப்பட்ட சுப்பிரதிஷ்டை என்னும் பாத்திரத்தினுள் ளாகப் பொருந்திய பாலை (க்ஷீரம்) ஈசான மந்திரங் கொண்டு ஒருமுறை பூசித்து அபி மந்திரிப்பது அதில ஈசானம் என்னும் திரு வருட்குணம் பதிதற்காகும். இதனாற் சத்துரு நிவாரணமாம். இதற்கு அதிபன் சுக்கிரன்.

**தயிர்**

கிழக்குக் கோஷ்டத்தில் சதாசிவ மென்னும் தத்துவத்தாலமைக்கப்பட்ட இடத்தின் மீதாகத் தாபிக்கப்பட்ட சுசாந்த மென்னும் பாத்திரத்தனுள்ளாகப் பொருந்திய தயிரை (ததி) தத்புருஷத்தா லிருமுறை பூசித்து அபிமந்திரிப்பது தத்புருஷகுணம் பதிதற் காகும். இதனாற் புத்திரப் பேறுண்டாம். இதற்கு அதிதேவதை சந்திரன்.

**நெய்**

தெற்குக் கோட்டத்தில் வித்தியாதத்து வத்தால் அமைக்கப்பட்ட இடத்தின் மீதாகத் தாபித்த தேஜோவத் பாத்திரத்தி னுள்ளாகப் பொருந்திய நெய்யை அகோ ரத்தினால் மும்முறை பூசித்து அபிமந்தி ரிப்பது அகோரமென்னுங் குணம் பதிதற் காகும். இது யாவராலும் பூசிக்கப்படும் மோக்ஷத்தைக் கொடுக்கும். இதற்கு அதிதேவதை உருத்திரன்.

**கோசலம்**

வடதிசையில் புருஷதத்துவத்தினால் அமைக்கப்பட்ட இடத்தின் மீதாகப் பொருந்திய இரத்தினோதக பாத்திரத்தி னுள்ளாக விருக்கும் கோசலத்தை வாம தேவத்தால் நான்கு முறை பூசித்து அபி மந்திரிப்பது வாமதேவகுணம் பதிததற் காகும். இது செல்வத்தைக் கொடுக்கும். இதற்கும் அதிதேவதை கங்கை.

**கோமயம்**

மேற்றிசையில் காலதத்துவத்தால் அமைக்கப்பட்ட இடத்தின் மீதாகப் பொருந்திய அமிர்தாத்மக பாத்திரத்தி லிருக்கும் கோமயத்தைச் சத்தியோ ஜாதத்தால் ஐந்துமுறை அர்ச்சித்து அபி மந்திருப்பது சத்தியோஜாதம் என்னுந் திருவருட்குணம் பதிதற்காகும். இது வியாதியை நீக்கும். இதற்கு அதிதேவதை சூரியன்.

கோமயத்தில் இச்சா ஞானக் கிரியா ரூபமானதளிருடன் வில்வந் தோற்றியது. அவ்வில்வத்தைத் திருமகள் விரும்பி அதன் கனிருக்கையால் ஸ்ரீபலம் என்னும் பெயரைப் பெற்றுச் சிவபெருமானுக்கு எக்காலமும் அணியத் தக்கதும் அர்ச்சித் தவர்களுடைய பாவங்களை நீக்குவது மாகிய பெருமையைப் பொருந்தியிருக் கின்றது. பின்பு நீலோற்பலக் கிழங்கும் தாமரைக் கிழங்கும் தோற்றியன.

**அரிசிமா**

அக்கினி திசையில் பிருதுவி தத்து வத்தால் அமைக்கப்பட்ட இடத்தின் மீதாகப் பொருந்திய வியக்த பாத்திரத்திலிருக்கும் அரிசிமாவை இருதய மந்திரத்தால் ஒரு முறையருச்சித்து, அபிஷேகஞ் செய்வதாற் பலவித தானியாதிகளுக்கு அதிபரா தலையும் மலநிவாரணத்தையும் அடைவர். அதிதேவதை விட்டுணு.

**நெல்லிக் காப்பு**

நிருதி திக்கில் அப்புதத்துவத்தால மைக்கப்பட்ட இடத்தின் மீதாகப் பொருந்திய சூரியபாத்திரத்திலிருக்கும் நெல்லிக் காப்பை சிரோமந்திரத்தால் அருச்சித்து அபிஷேகம் செய்தோர் செல்வத்தையம் ரோக நீக்கத்தை யுமடைவர். அதிதேவதை இலக்குமி.

**மஞ்சட் காப்பு**

வாயு திக்கில் மாயாதத்துவத்தா லமைக்கப்பட்ட இடத்தின் மீதாகப் பொருந்திய சம்யோக பாத்திரத்திலி ருக்கும் மஞ்சளை கவசத்தால் ஒரு முறை யபிமந்திரித்து அபிஷேகம் செய்தவர் அனேக சம்பத்தையும் இராசவசியத்தையும் அடைவர். இதற்கு அதிதேவதை சந்திரன்.

**குசோதகம்**

ஈசான திக்கிற் பிரகிருதி தத்துவத்தால மைக்கப்பட்ட இடத்தின் மீதாகப் பொருந்திய அவ்வியத்தமென்னும் பாத்திரத்திலிருக்குங் குசோதகத்தை மூலத் தாலமருச்சித்தபிடே கித்தவர்கள் பிரமலோகத்தையடைவர்.

பஞ்சகவ்விய திரவியங்கள் அனைத்தும் கிடையாவிடின், தயிர், பால் என்னும் இவற்றுள் யாதாயினுமொன்றையும், கோமயம், கோசலமென்னுமிவற்றுள் யாதா யினுமொன்றையும் மற்றொன்றுக்குப் பிரதி நிதியாக வைத்துக் கொள்ளலாம். பஞ்ச கவ்விய திரவியங்களுள் எது இல்லையோ அதற்குப் பதிலாக நெய்யை வைத்துக் கொள்ளலாகும். இங்ஙனம் அம்சுமானாக மத்திற் கூறப்பட்டது.

**பஞ்சாமிர்த விதி**

பஞ்சாமிர்தமானது ரச பஞ்சாமிர்த மென்றும் பல பஞ்சாமிர்தமென்றும் இருவகைப்படும். பால், தயிர், நெய், தேன், சர்க்கரை என்பவற்றை விதிப்படி சேர்ப்பின் இரச பஞ்சாமிர்தமெனப்படும்.

பால், தயிர், நெய், தேன், சருக்கரை, கருப்பஞ்சாறு என்பவற்றால் பஞ்சாமிர்தங் கற்பித்து, பஞ்சகவ்வியம் போற் பூசிக்க வேண்டும். இதனாற் பஞ்சபாதக நாச முண்டாம் என்று மகுடாகமங் கூறுகின்றது. இதுவும் ரச பஞ்சாமிர்தமாமென அறிக.

தேன், பால், தயிர், நெய், சர்க்கரை என்பவற்றைக் கிரமமாகக் கோட்டங்களில் வைத்து நாளிகேரோகத்தை ஈசான கோட்டத்தில் தாபித்துப் பூசித்து எஞ்சிய வாழைப்பழத்தை மூலமந்திரத்தாற் பூசித்து அபிஷேகிக்குமாறு சூக்ஷ்மாகமஞ் செப்புகின்றது.

பால், தயிர், நெய், தேன், சர்க்கரை என்பவற்றோடு விதிப்படி அமைக்கப்பட் வாழைப்பழம், பலாப்பழம், மாம்பழம் என்பவைகளைது தொகுதி பல பஞ்சா மிர்தம் என்று சொல்லப்படும்.

நவகோஷ்டங் கற்பித்து நடுக்கோட் டத்திற் பாலையும், கிழக்குக் கோட்டத்தில் தயிரையும், தெற்குக் கோட்டத்தில் நெய்யையும், வடக்குக் கோட்டத்தில் தேனையும், மேற்குக் கோட்டத்தில் சக்கரையையும் அக்கினி திக்கு கோட் டத்தில் வாழைப்பழத்தையும் நிருதி திக்குக் கோட்டத்தில் பலாப்பழத்தையும், வாயு திக்குக் கோட்டத்தில் மாம்பழத்தை யும், ஈசான கோட்டத்தில் கந்தோகத்தை யுந் தாபிக்க வேண்டும். பஞ்ச கவ்வியத் துக்குக் கூறியவாறு கோஷ்டபூசை முதலிய வற்றைச் செய்து சேர்த்து, அபிஷேகிக்க

வேண்டும். கந்தோதகத்தைத் தனித்து அபிஷேகிக்க வேண்டும். இவ்வாறு சிந்திய விசுவத்திற் செப்பப்பட்டது.

வாழைப்பழம், பலாப்பழம், தேங்காய்த் துருவல், மாம்பழம், மாதுளம்பழம் என்னுமிவற்றைச் சேர்ப்பது பல பஞ்காமிர்தமென்று சூட்சுமாகமம் செப்பும்.

பலாப்பழம், மாம்பழம், தேங்காய்த் துருவல், வாழைப்பழம், கருப்பஞ்சாறு என்னும் ஐந்து திரவியங்களைச் சேர்த்துக் கொண்டு அபிஷேகிப்பதால் மகாபாதக நாசமுண்டாமென்றுங் காரணகமம் கூறு கின்றது.

**பஞ்சபலோதகம்**

எலுமிச்சம்பழச்சாறு, நாரத்தம்பழச்சாறு, குளஞ்சிப்பழச்சாறு, தமரத்தம் பழச்சாறு, மாதுளம்பழச்சாறு ஆகிய இவைகளை விதிப்படி கூட்டின் பஞ்சபலோதகம் எனப்படும். இவைகளைப் பதமந்திர முச்சரித்து அபிஷேகிக்க.

**அபிஷேகபலன்**

சந்தனாதித் தயிலம் சுகத்தையும், மாக்காப்பு, மலநாசத்தையும், நெல்லிக் காப்பு (ஆமலகம்) ரோகநாசத்தையும், மஞ்சள்மா, இராசவசியத்தையும், பஞ்ச கவ்வியம் ஆன்மசுத்தியையும், ரசபஞ்சா மிர்தம் வெற்றியையும், பலபஞ்சாமிர்தம் செல்வத்தையும், பஞ்சபலோதமம் மந்திர சித்தியையும், பால் ஆயுள்விருத்தியையும், தயிர் பிரஜாவிருத்தியையம், நெய் மோக்ஷத்தையும், தேன் சங்கீதவன்மை யையும், கருப்பஞ்சாறு நித்திய சுகத்தை யும், சருக்கரை சத்துரு நாசத்தையும், வாழைப்பழம் பயிர் விருத்தியையும், பலாப்பழம் லோகவசியத்தையும், மாம்பழம் சகல வெற்றியையும், தமரத்தம்பழம் பூமி லாபத்தையும், மாதுளம்பழம் பகை நீக்கத் தையும், நாரத்தம் பழமும் கிடார நாரத்தம் பழமும் சற்புத்தியையும் எலுமிச்சம்பழம் மிருத்யு நிவா ரணத்தையும், தேங்காய்த் துருவலும் அன்னமும் அரசுரிமையையும், இளநீர் சற் புத்திரப் பேற்றையும், அபமிருத்து நாசத்தையும், கோரோசனை தீர்க்காயுளை யும், பச்சைக் கற்பூரம் பயநாசத்தையும், கஸ்தூரி வெற்றியையும், பனிநீர் சாலோக் கியத்தையும், சந்தனக்குழம்பு சாயுச்சியத் தையும், சகஸ்ரதாரை ஞானத்தையும், ஸ்நபனம் ஜன்மசாபல்லியத்தையும் சாரூப் பியத்தையும் கொடுக்குமென்று அபிஷேக பலன் வீராகமம் கூறுமென அறிக.

## திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

### பண் - காந்தாரபஞ்சமம்

**பாலினானறு நெய்யாற் பழத்தினாற் பயின்றாட்டி**
**நூலினான் மணமாலை கொணர்ந் தடியார் பரிந்தேத்தச்**
**சேலினார் வயல்புடைசூழ் செங்காட்டங் குடியதனுள்**
**காலினாற் கூற்றுதைத்தான் கணபதிச் சரத்தானே.**

## திருநாவுக்கரசு சுவாமிகள்

### பாவநாசத் திருக்குறுந்தொகை

**பாவமும் பழிபற்றற வேண்டுவீர்**
**ஆலிலைஞ் சுகந்தாடு மவன்கழல்**
**மேவராய் மிகவும் மகிழ்ந் துள்குமின்**
**காவலாளன் கலந்தருள் செய்யுமே.**

***அச்சுவேலி சிவஸ்ரீ. ச. குமாரசாமிக் குருக்கள்***

*நூலிலிருந்து*

# அத்வைத சிந்தனை - 1

இலக்கிய கலாநிதி பண்டிதமணி
சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

இறைவனை 'அத்துவித வஸ்து' என்கின்றார் தாயுமானவர். இறைவன் உயிர்க்குயிராய் உயிரேயாய் இரண்டற்றிருக்கின்றான்.

உயிர் உடம்போடு இரண்டற்று உடம்பேயாய் இருக்கின்றது. இவ்வாறு இரண்டற்றிருக்கும் நிலைக்கு அத்துவிதம் என்று பெயர். அத்வைதம் எனினும் பொருந்தும்.

மேற்காட்டிய இருவகை அத்துவித நிலைக்கும் வேறுபாடுண்டு. உயிர்க்கு உடம்போடுளதாய அத்துவித நிலை, நிலையில்லாதது; அநித்தியமானது.

உயிரோடு இறைவனுக்குளதாய அத்துவித நிலை, நிலையானது; நித்தியமானது. இந்த நித்திய அத்துவிதச் சிறப்பு நோக்கி, இறைவனை 'அத்துவித வஸ்து' என்று விதந்தோதினார் தாயுமானவர் எனலாம்.

உடம்பின் செயலனைத்தும் உயிரின் செயலே. அவ்வாறே, உயிரின் செயலனைத்தும் உயிர்க்குயிரரகிய இறைவன் செயலேயாம்.

'சந்ததமும் எனது செயல் நினது செயல்' என்கிறார் தாயுமானவர். உடம்பு மூலம் உயிர் செய்வதை, உயிர் செய்வது என்று உடம்பு அறியாது; அது சடம்.

உயிர் மூலம் உயிர்க்குயிர் செய்வதை, உயிர் சித்தாயிருந்தும், உயிர்க்குயிர் செய்கின்றதென்று அறிகின்றிலது; இது விசாரிக்கற்பாலது.

'ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம்' என்பது கொடிக்கவி; உமாபதி சிவத்தின் வாக்கு. 'ஒன்று' என்றது உயிரை. ஒளி 'அத்துவித வஸ்து' வாகிய இறை ஒளி. இருள் – ஆணவ இருள்.

ஒளி இருளை அறியாது; இருள் ஒளியை அறியாது. உயிரோ, இரண்டுக்கும் இடமாய் இருக்கின்றது. அறியாத காரணம் அறியாமையாகிய ஆணவ இருளில் உயிர் முழுகிக் கிடப்பதேயாம்.

காரணம் புலப்படும்போது, மற்றொரு சந்தேகம் தலைதூக்குகின்றது. ஒளிப்பிழம்பாகிய இறை அத்துவிதப்பட்டிருக்கும் உயிரை, இருள் மூடுவதெப்படி? என்பது சந்தேகம். இச்சந்தேகத்தை திருவருட்பயன் விடுவிக்கின்றது. 'ஒளியும் மிக இருளே' என்கின்றது திருவருட்பயன்.

பேரொளியை அனுபவிக்கும் ஆற்றல் உயிர்க்கில்லை. ஆகவே, ஆணவ இருளுக்கு மேலே, பேரொளியும் இருள் செய்து விடுகின்றது. இந்நிலையில், உயிரைக் 'குருட்டுக் கிழவன்' என்கின்றது திருமந்திரம். குருடு படுகுருடாய் விட்டது.

இப்பொழுது குருட்டுக் கிழவனைப் பற்றிப் பல கேள்விகள் எழலாம். இக்குருடனுக்குக் கோல் கொடுத்துதவுவார் இல்லையா? இவனது கண்கள் ஒருகாலும் வழிப்பதில்லையா? என்பன கேள்விகள்.

'ஒன்று மிகினும் ஒளி உள்ளம் கவரும்' என்ற திருவருட்பயன் கேள்வி களுக்கு விடை தருகின்றது.

ஒன்று – இருள்; மேல் விபரித்த உயிரைக் குருடுபடுத்தும் இருள். மிகினும் – அவ்விருள் எத்துணை மிக்கிருந்தாலும். ஒளி, உள்ளம் கவரும். அத்துவிதப் பட்டிருக்கும் இறையாகிய ஒளி, உள்ளம் எனப்படும் உயிரைத் தன்பால் ஈர்க்கும்.

இருள் சடம்; இறையொளி சித்து. சித்தாகிய இறை ஒளி இருளில் சடமாய்க் குருடுபட்டுக் கிடக்கும் உயிர்க்கிழவனைத் தன்பால் ஈர்த்தே தீரும்.

காந்தத்துக்கு இரும்பதைத் தன்பால் இழுக்காமலிருக்க மாட்டாமை இயற்கை. அவ்வாறே இறைஒளிக்கு, இரங்காம லிருக்கமாட்டாமை இயற்கை. இரங்கா மலிருக்கமாட்டாமையாகிய இரக்கத்தின் பயன்; உயிரைத் தன்பால் ஈர்த்தலாம்.

இருட்டறை மூலை இருந்த குமரி
குருட்டுக் கிழவனைக் கூடல் குறித்துக்
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
மருட்டி அவனை மணம்புரிந் தாளே.

குமரி–சிவசக்தி. இத்திருமந்திரத் தாலும்; 'நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதன்' என்ற திருவாசகத்தாலும்;

சிவமும் சிவசக்தியுமாகிய இறை ஒளி,

இருளிலிருந்து உயிரை ஈர்த்து, உய்யக் கொள்ளுந் திறன் அறியத்தக்கது.

உயிர்க்கு உய்தி, இருளிலிருந்து எடுக்கப்பட்டு, மாசு தீர்ந்து, தன்னோடு அத்துவிதப்பட்டிருக்கும் இறையோடு, தான் அத்துவிதப்படுதலாம். இந்த அத்து விதம் சுத்தாத்துவிதம் எனப்படும். சுத்தம் – மாசின்மை.

ஆணவத்தோடு அத்துவிதமானபடி, மெய்ஞ்ஞானத்தாணுவினோடு அத்து விதஞ்சாருநா ளெந்நாளோ' என்கிறார் தாயுமானவர்.

இதனால், அத்துவித வஸ்துவாகிய இறைஒளி, உயிரோடு அத்துவிதப்பட்டி ருக்கும்போதே, உயிர் ஆணவத்தோடு அத்துவிதப்பட்டிருந்த தென்பதும், அது பக்குவப்பட்டு மெய்ஞ்ஞானத் தாணு வாகிய இறை ஒளியோடு அத்துவிதப்பட வேண்டும் என்பதும் பெறப்படும்.

இவற்றால் உயிரோடு அத்துவிதப்பட்டி ருக்கும் இறையோடு, உயிரும் அத்து விதப்படவேண்டும் என்பதே முடிந்த முடிபாம்.

இறை அத்துவிதம் அநாதி; தொடக்கம் இல்லாதது. உயிர் அத்துவிதம் ஆதி; தொடக்கம் உள்ளது. அது நீயாயிருக்கிறது; அவ்வாறே, நீ அதுவாயிருக்க வேண்டும் என்றவாறு.

**'அவன்தானாய் அத்துவித மானபடி மாசகன்று**
**தான்அவனாய் அத்துவிதம் ஆகுநா ளெந்நாளோ'**

என்றொரு சூத்திரம் வரலாம்.

தான் – உயிர், அவன் – இறை.

அத்துவித வஸ்துவின் விளைவுப் பயனே, உயிரெய்தும் சுத்தாத்துவித முத்திப்பேறு.

அத்துவித விளைவைப் புலப்படுத்து பவை, வடமொழியிலும் தென்மொழியிலும் உள்ள மகா வாக்கியங்களாம். வடமொழி வாக்கியங்களில் முக்கியமானது, 'தத்துவமசி'. அவ்வாறே, தென்மொழி வாக்கியங்களுள் முக்கியமானது, 'உடனாதல்'.

வடமொழி வாக்கியங்களுள் மற்றொன்று, 'துவம் தத்தசி'.

தத்துவம் – அது நீ;

துவம் தத் – நீ அது.

இரு வாக்கியப் பொருளையுந் தர வல்லது, 'உடனாதல்'.

இறைவன் உயிரோடு அத்துவிதப்பட்டிருப்பது போல உயிரும் இறைவனோடு அத்துவிதப்படவேண்டும் என்ற முக்கியப் பொருளை நினைவுகூர்வோமாக.

## பக்திக் கதைகள்

பங்குனி உத்திரத்தன்று முக்கியமாகக் கடைப்பிடிக்கவேண்டியது அன்னதானமும், நீர் மோர் தானமும். இதனால் கிடைக்கும் நன்மை பற்றியதே இந்தக் கதை. சிவசாமி – சிவகாமி தம்பதியரின் புதல்வன் கந்தன். பணக்காரரான சிவசாமி தினமும் அன்னதானம் செய்து வந்தார். கணவருக்கு உதவியாக சிவகாமி இருந்தாள். சிறுவனான கந்தனுக்கு பெற்றோர் தினமும் இப்படி தானம் செய்கிறார்களே! இது எதற்காக என்று அறியும் ஆவல் ஏற்பட்டது. தந்தையிடம் இது பற்றிக் கேட்டான். மகனே! ஒரு பங்குனி உத்திரத்தன்று என் தாத்தா இந்தத் தானத்தை ஆரம்பித்தார். அதை உன் தாத்தாவும் கடைப்பிடித்தார். நானும் அதையே பின்பற்றுகின்றேன். முன்னோர் செயலுக்குக் காரணம் இருக்கும். ஆனால், நான் எந்தப் பலனையும் எதிர்பார்த்து இதைச் செய்யவில்லை என்பதால் அதை அறியமுயற்சிக்கவில்லை. வேண்டுமானால் நீ முயற்சித்துப் பார் என்றார் அப்பா. நான் காட்டுக்குப் போய் தவமிருந்து அன்னதானத்தின் பலன் பற்றி அறிந்து வருகின்றேன். நீங்கள் அனுமதிக்கவேண்டுமென்றான். சிவசாமியும் அனுமதி தர கந்தன் காட்டுக்குப் புறப்பட்டான். அவனது அம்மா கட்டுக்சோறு கட்டிக் கொடுத்தாள்.

வழியில் ஒரு துறவி அவனைச் சந்தித்து பசிக்கிறது என்றார். கட்டுச்சோற்றை அவரிடம் கொடுத்துவிட்டு கந்தன் நடந்தான். காட்டை அடைந்தவேளையில் இருள் சூழ ஆரம்பித்தது. அவனைக் கண்ட ஒரு வேடன் காட்டில் இருளில் நடமாடுவது நல்லதல்ல, மிருகங்கள் உன்னைக் கொன்றுவிட வாய்ப்புள்ளது. நீ எனது வீட்டுக்கு வா என்னோடு தங்கிவிட்டுக் காலையில் செல் என்றான். கந்தனும் உடன் சென்றான். வேடன் தன் மனைவியிடம் இருவருக்கும் உணவு கொடு என்றான். அவள் ஒரு கொடுமைக்காரி நீயே தண்டச்சோறு; கூட ஒருவனைக் கூட்டி வந்திருக்கிறாயா? என்று திட்டினாள். நீ அவனுக்குத் தனியாக எதுவும் கொடுக்கவேண்டாம். எனக்குத் தரும் சோற்றைத் தா. அதை நான் பகிர்ந்து கொள்கிறேன் என்றான். அதன்படியே கந்தனுக்கு உணவளித்தான். இரவில் அவர்கள் பரணில் ஏறிப்படுத்தனர். தனக்குரிய இடத்தைச் சிறுவனுக்குக் கொடுத்துவிட்டு வேடன் விழித்திருந்தான். ஒரு கட்டத்தில் கண் அசந்தான். அங்குவந்த புலி அவனைக் கொன்றது. மறுநாள் வேடனின் மனைவி அந்த அதிர்ச்சியில் இறந்துவிட்டாள். வருத்தமடைந்த கந்தன் தவம் செய்யக் காட்டுக்குள் சென்றான். அப்போது ஒரு ஆண் குழந்தையின் அழுகுரல் கேட்டது. தவமுயற்சியை விட்டுவிட்டு அரண்மனையில் ஒப்படைத்தான். அது அந்த நாட்டு ராஜாவின் குழந்தை ராஜாவுக்கு வேண்டாத சிலர் அது பிறந்தவுடன் காட்டில் போட்டிருந்தனர். குழந்தை கிடைத்த மகிழ்ச்சியில் ராஜா கந்தனைப் பாராட்டினான். அப்போது குழந்தை பேசியது. "நான் நேற்றிரவு இறந்துபோன வேடன். நான் இந்தச் சிறுவனுக்கு உணவளித்ததால் ராஜா வீட்டுக் குழந்தையாகப் பிறந்தேன். இவனுக்கு உணவளிக்க மறுத்த என் மனைவி, காட்டில் பன்றியாகப் பிறந்திருக்கிறாள். அன்னதானத்தின் பலன் பற்றி அறிய இந்தச் சிறுவன் காட்டுக்கு வந்தான். அவனுக்கு அதை உணர்த்தவே இறைவன் மூலம் இந்த நாடகம் நடந்தது. தானத்தின் பெருமை உணர்ந்த கந்தன் வீட்டுக்கு வந்து பெற்றோரிடம் சொல்ல அவர்கள் தானத்தைத் தொடர்ந்தனர்.

# சிறுவர் விருந்து

## கடவுளைக் காணலாமோ?

சகோதரி யதீஸ்வரி அவர்கள்

அன்பான பிள்ளைகளே! அன்பு வணக்கம்.

சித்திரைப் புத்தாண்டு வருகிறது. எல்லோருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

கடவுளை எப்படி எல்லாம் வழிபட வேண்டும், வழிபடலாம் என்று பெரியவர்கள் பல நெறிகளை வகுத்து வைத்துள்ளார்கள். பல மகான்கள் நல்ல நெறிகளைப் பின்பற்றி கடவுளைக் கண்டும் இருக்கிறார்கள். அப்படிக் கடவுள் தரிசனம் பெற்ற ஒரு சாதாரண மனிதன் கதையை இப்போது கேளுங்கள்.

ஒரு ஊரிலே பணக்காரர் ஒருவர் இருந்தார். அழகான மனைவி, செல்லப் பிள்ளைகள், பெரிய மாளிகை போன்ற வீடு, சகல வசதிகளோடும் அவர் வாழ்ந்து வந்தார். அவர் வீட்டில் பெரியதொரு சுவாமி அறையும் இருந்தது. தங்கத்தினால் செய்த லட்சுமி விக்கிரகம் இருந்தது. அழகாகக் கண்ணாடி இடப்பட்ட சுவாமிப் படங்கள் பல இருந்தன. வெள்ளிக் குத்து விளக்குகள் வேண்டிய யாவும் நிறைய இருந்தன. தினசரி அந்தப் பணக்காரர் மிக ஆடம்பரமாகவே பூஜை பண்ணுவார். தாம் ஒரு பெரிய பக்தர் என்று காட்டிக்கொள்வதில் அவருக்கு அலாதியான விருப்பம் இருந்தது.

ஒரு நாள் அந்த ஊருக்கு ஒரு சாது வந்தார். தெரு ஓரம் இருந்த ஒரு வீட்டுத் திண்ணையில் அவர் உட்கார்ந்திருந்தார். தெருவில் போவோர் வருவோர் ஒரு கும்பிடு போட்டுவிட்டுப் போவார்கள். சாதுவும் அவர்களை ஆசீர்வதிப்பார். நமது பணக்காரப் பக்தர் இந்தச் சாதுவைப் பார்த்தார். அவரை வெகு மரியாதையுடன் தமது வீட்டிற்கு அழைத்துவந்து, வயிறு நிறைய உணவளித்தார். சாதுவும் உணவு உண்டு, பணக்காரரை ஆசீர்வதித்துவிட்டுப் போகப் புறப்பட்டார்.

பணக்காரரும் அவருடன் சில வார்த்தைகள் உரையாடினார். சாது மகா ஞானி என்பது அவரது வார்த்தைகளில் புலப்பட்டது. இதை உணர்ந்த பணக்காரர் ‘சுவாமி! அடியேனும் எவ்வளவோ வருந்திக் கும்பிடுகிறேன். ஆனால்; எனக்கு ஆண்டவன் திருவருள் புரியவில்லையே....” என்று வருத்தத்துடன் கூறினார்.

சாது புன்னகைத்தார். “ஏனப்பா... உனக்கு என்ன குறை? மகாலட்சுமியே உன் வீட்டில் குடியிருக்கிறாள். ஏன் கவலைப்படுகிறாய்?” என்று கேட்டார்.

“சுவாமி! மகாலட்சுமியை நேரிலே காணவேண்டும். அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்? எப்படிக் கும்பிட வேண்டும்? மந்திரம் ஏதும் உண்டா?” என்று கேட்டார் பணக்காரர்.

சாது சிறிது யோசித்தார். பிறகு தினமும் நீ எண்ணும் உணவைச் சுவாமிக்குப் படைக்க வேண்டும். இதோ, இந்தக் கிண்ணத்தில் படைத்து வணங்கிவா, கடவுளைக் காணலாம். வேண்டும் வரம் பெறலாம்" என்று சொல்லித்தன் கையிலிருந்த முடிச்சினை அவிழ்த்து, அதனுள் இருந்த சிறு மண் கிண்ணம் ஒன்றை எடுத்தக் கொடுத்தார். "அட! வெறும் மண் கிண்ணம்" என்று உள்மனது நினைக்க, வெளியில் வெகு பணிவுடன் அதனைக் கையில் வாங்கிக் கொண்டார் அந்தப் பணக்காரர்.

சாது போனபின், தமது பூஜையறையுள் அந்தக் கிண்ணத்தை வைக்கப்போன பணக்காரர் மீண்டும் அந்தக் கிண்ணத்தைப் பார்த்தார். ஒரு சாதாரண மண் ஓடு அது. அவரது பூஜை அறையில் தங்கக் கிண்ணங்களும், தங்கத் தட்டுக்களும் இருந்தன. அவற்றோடு இந்த மண் ஓட்டையும் வைப்பதா?

அவருக்கு அருவெறுப்பாக இருந்தது. யன்னல் வழியே அதை வெளியே வீசினார். ஆனால்; தினசரி அறுசுவை உணவுகள், இனிய பல பட்சணங்கள் பலவகைப் பழங்கள், பானங்கள் தங்கப் பாத்திரங்களில் படைத்துப் பூசை செய்த பின்பே அவற்றை உண்பதனை வழக்கமாக்கிக் கொண்டார். நாட்கள் பல ஓடின. கடவுள் மட்டும் காட்சி தரவே இல்லை. பணக்காரருக்கோ இது பெரிய இடர்ப்பாடாக இருந்தது. தமக்கு விரைவில் கடவுள் தரிசனம் தரப்போவதை அவர் தமது பணக்கார நண்பர்களுக்கும் கூறி வைத்திருந்தார். அதனால்; இடைக்கிடை அவர்களின் விசாரிப்புக்கள் அவருக்கு எரிச்சலை மூட்டிக் கொண்டிருந்தன.

இந்நிலையில் எதிர்வரும் வருடப் பிறப்புக்காக வீடு வளவைச் சுத்தம் செய்ய எண்ணிய அவரது மனைவி, ஊரில் எல்லையில் வசித்த ஒரு கூலியாளை அதற்காக ஒழுங்கு செய்தாள். வேலைக்கு வந்த மனிதன் மிகவும் ஏழை. உணவுப் பற்றாக்குறையினால் இளமையிலேயே முதிய தோற்றத்தைப் பெற்றிருந்தான். முதுகும் கொஞ்சம் கூனல். அவனை அந்த அம்மாள் வளவைச் சுத்தப்படுத்தும்படி ஏவினாள். அவனும் சோம்பல்படாமல் நன்றாக வேலை செய்தான். பணிவுடனும், நேர்மையுடனும் நிறையப் பாடுபட்டுத் தனியனாகவே வளவைச் சுத்தம் செய்தான். மாலையில் வீடு செல்லும்போது அந்த அம்மாள் அவனுக்கு உணவும், கூலியும் கொடுப்பாள். நன்றியுடன் பெற்றுச் செல்வான் அவன். இரண்டொரு நாள் வேலை செய்தபின், அவர்களுடைய பூஜையறையைச் சூழ இருந்த பற்றைகளை வெட்டிச் சுத்தம்பண்ணும் போது சிறு மண் ஓடு ஒன்று அவனுக்குக் கிடைத்தது. பணக்காரருக்குச் சாது மகான் கொடுத்த அதே ஓடு தான் அது. புதிய மண் பாத்தரம்போல அது மாசுபடாமல் இருந்தது. அதை அவன் எடுத்துச் சென்று வீட்டுக்கார அம்மாவிடம் காணபித்தான். "அம்மா! இது உங்கள தோட்டத்தில் கிடந்தது" என்றான். அந்த அம்மா அதைப் பார்த்ததும் "வெறும் மண் ஓடு. ஏன் இது? தூர வீசிவிடு!" என்றாள்.

அந்த வேலையாள் வீட்டில் சாப்பிடக் கூட நல்ல தட்டுக்கிடையாது. எனவே; அம்மா வீசச் சொன்ன அந்தக் கிண்ணத்தை அவன் தன் குடிசைக்குக் கொண்டு சென்று மனைவியிடம் கொடுத்தான். அவளும் அதனை நன்கு கழுவி, உணவு வைப்பதற்காகப் பயன்படுத்தினாள்.

வழமையாக அந்த மனிதனும் மனைவியும் தமக்குக் கிடைக்கும் உணவு எதுவானாலும் அதைச் சுவாமிக்கு நைவேத்தியமாக வைத்து, பக்திப் பாடல்களைப் பாடி, அன்புடன் துதித்து, "கடவுளே! இன்று நீங்கள் தந்த பிரசாதம் இது எமக்கு!" என்று உள்ளமுருகி நன்றி பாராட்டிய பின்பே உண்பது வழமை. அந்த மண் ஓட்டிலே உணவை வைத்து அவ்வாறே துதித்து, அவர்கள் உண்ணத் தொடங்கும்போது ஒரு சிறு அழகான சிறுவன் வந்து "எனக்கும் பசிக்கிறது, சாப்பாடு தாங்கோ!" என்று கேட்டபடி அருகில் உட்கார்ந்து கொண்டான். "யாரோ பக்கத்து விட்டுப்பிள்ளை" என்று அவர்களும் மிக அன்புடன் அந்தச் சிறுவனுக்கு ஊட்டி மகிழ்ந்து, அவன் ஓடியபின் மிஞ்சி இருந்ததை உண்டனர். அவர்களை அறியாமலே; அவர்கள் மிக இளமையான தோற்றத்தையும், சிறந்த அறிவையம் பெற்றார்கள். அவர்கள் தொட்டதெல்லாம் துலங்கியது. வீட்டில் செல்வம் செழித்தது.

அழகான வீடு, சிறந்த மக்கட்பேறு எல்லாம் அவர்களுக்குக் கிடைத்தன. சின்னஞ் சிறுவனாக வந்து அவர்களிடம் உணவு உண்டவன் ஸ்ரீகிருஷ்ணன் என்பதை அவர்கள் உணர்ந்து, மேலும் பயபக்தியுடன் வணங்கி, ஊராருக்கும் உதவி நீண்ட காலம் நலமாக வாழ்ந்தார்கள்.

தற்செயலாக ஒருநாள் அந்தப்பக்கம் வந்த நமது பழைய பணக்காரர் ஒரு புதிய வீட்டை, ஊர் புகழும் மனிதர்களைக் கண்டு உள்ளே வந்தார். அந்த நல்ல மனிதனும் மனைவியும் அவரைப் பணிவன்புடன் வரவேற்று உபசரித்தனர்.

"இதெல்லாம் உனக்கு எப்படி வந்தது?" கேட்டார் பணக்காரர்.

"ஐயா? உங்கள் அம்மா வீசச்சொன்ன ஒரு மண் ஓட்டில்படைத்த எளிய உணவை ஏற்ற இறைவன் தந்தது இது எல்லாம் என்றனர் இவர்கள். அந்த ஓட்டைப் பூஜை அறையில், கண்ட பணக்காரர், அது தமக்குச் சாது தந்து, 'வெறும் மண் ஓடு' என்று தான் வீசிய அதே மண் ஓடுதான் என்று கண்டு, பெருமூச்சுடன் விடை பெற்றுச் சென்றா! அதைச் சொல்லக்கூட அவர் கர்வம் விடவில்லை!

# அருள் ஒளி தகவல் களஞ்சியம்

**கீரிமலை காசி விசாலாட்சி அம்பாள் சமேத காசி விஸ்வநாதசுவாமி திருக்கோவில்**

பல வருடங்களுக்குப் பின் ஆலயம் புதிய வடிவில் அமைக்கப்பட்டு, நூற்றி எட்டு நர்மதா லிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு 05-04-2015 அன்று மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. பிரதம குருவாக மகாராஜஸ்ரீ ச. இரத்தின சபாபதிக் குருக்கள் ஆற்றுப்படுத்த வுள்ளார்.

**தெல்லிப்பழை கோவில்புலம் ஸ்ரீ சந்திர மௌலீஸ்வரர் ஆலய கும்பாபிஷேகம்**

சிவகாமி அம்பாள் சமேத சந்திர மௌலீஸ்வரர் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் 10-04-2015 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது. பிரதம குருவாக முத்தமிழ் குருமணி சிவஸ்ரீ. நா. சர்வேஸ்வரக் குருக்கள் கடமை யாற்றவுள்ளார்.

**துர்க்காதேவியின் வருடாந்த பொங்கல் விழா**

ஆண்டு தோறும் பங்குனி மாத நிறைவுச்செவ்வாய்க்கிழமை நடைபெறும் பொங்கல் விழா 07-04-15 அன்று காலை 6 மணிக்கு வழமை போல் சிறப்பாக நடைபெறவுள்ளது.

**பருத்தித்துறையில் உருவச்சிலை திறப்பு**

1954ல் யாழ்ப்பாணத்தின் வல்வெட்டித்துறைக் கரையிலிருந்து தமிழகத்தின் கோடிக்கரை வரை நீந்திச் சென்று சாதனை படைத்த அமரர் முருகுப் பிள்ளை நவரத்தினசாமியின் உருவச் சிலை 27-03-2015 பிரதேச செயலர் திரு.த. ஜெயசீலன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

**பேராசிரியர் நந்தியின் நினைவாக நினைவுப் பேருரை**

யாழ். பல்கலைக்கழக முன்னாள் மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் சி. சிவஞானசுந்தரம் (நந்தி) அவர்களின் நினைவாக நடாத்தும் நினைவுப் பேருரையினை பேராசிரியர் வி.கே.கணேச லிங்கம் அவர்கள் நிகழ்த்தவுள்ளார். 30-03-2015 யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்றது.

**வட்டுக்கோட்டையில் ஆலயத் தொண்டர்கள் குருதிக் கொடை**

வட்டுக்கோட்டை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு இம்மாதம் 29ஆம் திகதி ஞாயிறு காலை 9 மணிக்கு மூளாய் வீதி, வட்டுக்கோட்டை கணேசா சனசமூக நிலைய மண்டபத்தில் குருதிக்கொடை வழங்கும் நிகழ்வு வழமை போல் நடைபெறவுள்ளது.

**சமஸ்கிருத வகுப்பு ஆரம்பம்**

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் இலவச சமஸ்கிருத வகுப்பு இம்மாதம் முதல் யாழ். ஆனைப்பந்தி இந்து குரு குலத்தில் ஆரம்பமாகவுள்ளது. நல்லூர் பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் கற்க விரும்புவர்கள் தொடர்பு கொண்டு பதிவு செய்யலாம்.

**ஏழாலையில் சைவசித்தாந்த ஆய்வு நிலையம் ஆரம்பம்**

ஏழாலையில் சைவ சித்தாந்த ஆய்வு நிலையம் சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்களால் இம் மாதம் திறந்து வைக்கப்பட்டது.

**திருநெல்வேலி சைவச்சிறுவர் இல்லம் புதிய மாடிக் கட்டடத் திருப்பணி**

சைவவித்தியா விருத்திச் சங்கம் நடாத்தும் திருநெல்வேலி சைவச் சிறுவர் இல்ல ஆண் பிள்ளைகளின் விடுதியை நவீன வசதிகளுடன் மாடிக் கட்டடமாக நிர்மாணிப்பதற்கு ஏற்பாடு செய்துள்ளார்கள். இதற்கான நிதியுதவி கோரி அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

**முறிகண்டியில் இந்துமாமன்ற மண்டபம்**

அகில இலங்கை இந்துமா மன்றம் வன்னிப் பிராந்தியத்தில் தம் பணிகளை மேலும் விஸ்தரிக்கும் பொருட்டு முறி கண்டிப் பிள்ளையார் கோவிலுக்கு அருகில் கட்டடப் பணிகளை ஆரம்பித் துள்ளது.

**சுன்னாகம் ஐயனார் ஆலயம் இசை இறுவெட்டு வெளியீட்டு விழா**

மகா வித்துவான் வீரமணி ஐயரால் பாடப்பட்ட பாடல்களும் கவிஞர், வீராவின் பாடல்களும் இந்தியக் கலைஞர்களால் பாடப்பட்டு சமீபத்தில் வெளியிடப்பட்டது.

**இளவாலை ஆனைவிழுந்தான் விநாயகர் மஹோற்சவம்**

வருடாந்த பெருந்திருவிழா 24-03-2015 ஆரம்பமாகி 07-04-2015 அன்று நிறைவு பெறும். 03-04-2015 வெள்ளி காலை 10 மணிக்கு தேர்த்திருவிழா நடைபெற வுள்ளது. ஆலய பிரதமகுரு. சிவஸ்ரீ. இராம. பாலச்சந்திரக் குருக்கள் அவர்களால் கொடியேற்றப்படவுள்ளது.

**வட்டுக்கோட்டை சர்வசித்தி விநாயகர் கும்பாபிஷேகம்**

பழமைமிக்க வட்டுக்கோட்டை உழுத் தொல்லையம்பதி சர்வசித்தி விநாயகர் கோவில் புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் பங்குனி மாதம் 23-03-2015 மிகவும் சிறப்பாக நடைபெற்றது. பிரதம குருவாக வட கோவை சிவஸ்ரீ.ப.முத்துக் குருக்கள் பணியாற்றினார்.

**பாலஸ்தாபன கும்பாபிஷேகம்**

மருதனார்மடம் பல்லப்ப பைரவ சுவாமிக்கு 03-04-2015 வெள்ளி காலை 6 - 6.45 மணிக்கு பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது.

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் – தெல்லிப்பழை, இலங்கை
# 2015–2016 மன்மத வருட பிரதான உற்சவங்கள்

## சித்திரை மாதம்

| | | |
|---|---|---|
| மன்மத வருடப்பிறப்பு, சங்கிராந்தி தீர்த்தம் | 14-04-2015 | செவ்வாய் |
| சித்திரைப் பரணி | 19-04-2015 | ஞாயிறு |
| உமாபதி சிவாச்சாரியார் குருபூசை | 01-05-2015 | வெள்ளி |
| சித்திரபுத்திரனார் கதை | 02-05-2015 | சனி |
| சித்திரா பூரணைத் திருவிழா | 03-05-2015 | ஞாயிறு |
| திருநாவுக்கரசு நாயனார் குருபூசை | 12-05-2015 | செவ்வாய் |
| திருமுறை முற்றோதல் ஆரம்பம் | 12-05-2015 | செவ்வாய் |

## வைகாசி மாதம்

| | | |
|---|---|---|
| வைகாசி மாத சங்கிராந்தி தீர்த்தம் | 15-05-2015 | வெள்ளி |
| சேக்கிழார் குருபூசை | 23-05-2015 | சனி |
| வைகாசி விசாகம் – சங்காபிஷேகம் | 01-06-2015 | திங்கள் |
| வைகாசி மாத பூரணைத் திருவிழா | 02-06-2015 | செவ்வாய் |
| திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குருபூசை | 04-06-2015 | வியாழன் |

## ஆனி மாதம்

| | | |
|---|---|---|
| ஆனி மாதச் சங்கிராந்தி – தீர்த்தம் | 15-06-2015 | திங்கள் |
| மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை | 22-06-2014 | திங்கள் |
| ஆனி உத்தரம் | 24-06-2015 | புதன் |
| சிவத்தமிழ்ச்செல்வி அம்மா குருபூசை | 28-06-2015 | ஞாயிறு |
| ஆனி மாத பூரணைத் திருவிழா | 01-07-2015 | புதன் |

## ஆடி மாதம்

| | | |
|---|---|---|
| ஆடிப்பிறப்பு – சங்கிராந்தி தீர்த்தம் | 17-07-2015 | வெள்ளி |
| 1ஆம் ஆடிச் செவ்வாய் | 21-07-2015 | செவ்வாய் |
| சுந்தரமூர்த்திநாயனார் குருபூசை | 24-07-2015 | வெள்ளி |
| 2ஆம் ஆடிச் செவ்வாய் | 28-07-2015 | செவ்வாய் |
| ஆடிமாத பூரணைத் திருவிழா | 31-07-2015 | வெள்ளி |
| 3ஆம் ஆடிச் செவ்வாய் | 04-08-2015 | செவ்வாய் |
| 4ஆம் ஆடிச் செவ்வாய் | 11-08-2015 | செவ்வாய் |
| ஆடி அமாவாசை | 14-08-2015 | வெள்ளி |
| ஆடிப்பூரம் அபிஷேகம் திருவிழா | 16-08-2015 | ஞாயிறு |

## ஆவணி மாதம்

| | | |
|---|---|---|
| ஆவணி மாத சங்கிராந்தி தீர்த்தம் | 17-08-2015 | திங்கள் |
| கொடியேற்றம் | 17-08-2015 | திங்கள் |
| திருமஞ்சத் திருவிழா | 22-08-2015 | சனி |
| வேட்டைத் திருவிழா (ஆவணி மூலம்) | 25-08-2015 | செவ்வாய் |
| கைலாசவாகன உற்சவம் | 25-08-2015 | செவ்வாய் |
| சப்பரத் திருவிழா | 26-08-2015 | புதன் |
| தேர் உற்சவம் | 27-08-2015 | வியாழன் |
| தீர்த்த உற்சவம் (ஆவணி ஓணம்) | 28-08-2015 | வெள்ளி |
| கொடியிறக்கம் | 28-08-2015 | வெள்ளி |
| வரலட்சுமி விரதம் | 28-08-2015 | வெள்ளி |
| பிராயச்சித்த அபிஷேகம் | 29-08-2015 | சனி |
| வைரவசுவாமி பொங்கல் | 29-08-2015 | சனி |
| ஆவணிமாத பூரணைத் திருவிழா | 29-08-2015 | சனி |

## புரட்டாதி மாதம்

| | | |
|---|---|---|
| புரட்டாதி மாத சங்கிராந்தி தீர்த்தம் | 17-09-2015 | வியாழன் |
| புரட்டாதி மாத பூரணைத் திருவிழா | 27-09-2015 | ஞாயிறு |
| அருணந்தி சிவாச்சாரியார் குருபூசை | 10-10-2015 | சனி |
| நவராத்திரி விழா ஆரம்பம் | 13-10-2015 | செவ்வாய் |

## ஐப்பசி மாதம்

| | | |
|---|---|---|
| ஐப்பசி மாத சங்கிராந்தி தீர்த்தம் | 18-10-2015 | ஞாயிறு |
| விஜயதசமி, கேதாரகௌரி விரத ஆரம்பம் | 22-10-2015 | வியாழன் |
| ஐப்பசி மாதப் பூரணைத் திருவிழா | 27-10-2015 | செவ்வாய் |
| ஐப்பசி மாதப் பரணி | 28-10-2015 | புதன் |
| தீபாவளி | 10-11-2015 | செவ்வாய் |
| கேதாரகௌரி விரதபூர்த்தி | 11-11-2015 | புதன் |
| மெய்கண்டதேவர் குருபூசை | 11-11-2015 | புதன் |
| கந்தஷஷ்டி விரத ஆரம்பம் | 12-11-2015 | வியாழன் |

## கார்த்திகை மாதம்

| | | |
|---|---|---|
| கார்த்திகை மாத சங்கிராந்தி தீர்த்தம் | 17-11-2015 | செவ்வாய் |
| கந்தஷஷ்டி விரத பூர்த்தி | 17-11-2015 | செவ்வாய் |
| குமாராலய தீபம், சர்வாலய தீபம் | 25-11-2015 | புதன் |
| திருவிளக்குப் பூசை, திருக்கார்த்திகை | 25-11-2015 | புதன் |
| கார்த்திகை மாத பூரணைத் திருவிழா | 25-11-2015 | புதன் |
| விநாயக ஷஷ்டி விரத ஆரம்பம் | 26-11-2015 | வியாழன் |
| ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை | 02-12-2015 | புதன் |
| சேர்.பொன். இராமநாதன் குருபூசை | 15-12-2015 | செவ்வாய் |

## மார்கழி மாதம்

| | | |
|---|---|---|
| மார்கழி மாத சங்கிராந்தி தீர்த்தம் | 16-12-2015 | புதன் |
| விநாயக ஷஷ்டி அபிஷேகம் திருவிழா | 16-12-2015 | புதன் |
| திருவெம்பாவை பூசை ஆரம்பம் | 17-12-2015 | வியாழன் |
| வைகுண்ட ஏகாதசி | 21-12-2015 | திங்கள் |
| மார்கழி மாதப் பூரணைத் திருவிழா | 25-12-2015 | வெள்ளி |
| ஆருத்திரா தரிசனம், அபிஷேகம், திருவிழா | 26-12-2015 | சனி |
| சிவத்தமிழ்ச்செல்வி அம்மா பிறந்தநாள் அறநிதியம் | 07-01-2016 | வியாழன் |

## தை மாதம்

| | | |
|---|---|---|
| தைப்பொங்கல், சங்கிராந்தி தீர்த்தம் | 15-01-2016 | வெள்ளி |
| தை மாதப் பூரணைத் திருவிழா | 23-01-2016 | சனி |
| தைப்பூசம் அபிஷேகம் | 24-01-2016 | ஞாயிறு |
| மணவாளக்கோலம், சங்காபிஷேகம் திருவிழா | 28-01-2016 | வியாழன் |
| தை அமாவாசை | | |
| அபிராமிப்பட்டர் விழா | 08-02-2016 | திங்கள் |
| மாசிமக இலட்சார்ச்சனை ஆரம்பம் | 12-02-2016 | வெள்ளி |

## மாசி மாதம்

| | | |
|---|---|---|
| மாசி மாத சங்கிராந்தி தீர்த்தம் | 13-02-2016 | சனி |
| கச்சியப்ப சிவாச்சாரியார் குருபூசை | 17-02-2016 | புதன் |
| இலட்சார்ச்சனை பூர்த்தி | 21-02-2016 | ஞாயிறு |
| மாசி மகப் பெருவிழா | 22-02-2016 | திங்கள் |
| மாசி மாத பூரணைத் திருவிழா | 22-02-2016 | திங்கள் |
| மகா சிவராத்திரி விழா | 07-03-2016 | திங்கள் |

## பங்குனி மாதம்

| | | |
|---|---|---|
| பங்குனி மாத சங்கிராந்தி தீர்த்தம் | 14-03-2016 | திங்கள் |
| யோகர் சுவாமிகள் குருபூசை | 19-03-2016 | சனி |
| பங்குனி உத்தர அபிஷேகம் | 23-03-2016 | புதன் |
| புராணப்படிப்பு ஆரம்பம் | 23-03-2016 | புதன் |
| பங்குனி மாத பூரணைத் திருவிழா | 23-03-2016 | புதன் |
| வருடாந்த பங்குனிப் பொங்கல் விழா | 12-04-2016 | செவ்வாய் |

தெல்லிப்பழை
14-04-2015

நிர்வாக சபை
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்





அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவில்
மஹா கும்பாபிஷேக நிகழ்வு 08-04-2015

PRINT Master T.P. 021-205 3322